# கலைத் தமிழ் இலக்கணம்

இரண்டாம் புத்தகம் பகுதி I

## ஐந்தாம் படிவம் பொதுப் பகுதி

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்
வித்துவான். **ஆ. குருசாமி ஐயா** அவர்கள்,
தலைமைத் தமிழ் ஆசிரியர்,
நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி,
**கருவூர்.**

T17555
R005K03

**தமிழ் நாடு நூற்பதிப்பகம்,**
இலிங்காயத்தார் தெரு,
உறையூர் :: திருச்சிராப்பள்ளி.

உரிமை பதிவு] 1955 [விலை 0—8—0

# கலைத் தமிழ் இலக்கணம்

## இரண்டாம் புத்தகம் பகுதி I

## ஐந்தாம் படிவம் பொதுப் பகுதி

27-1-54-உ புதிய பாடதிட்டப்படி இலக்கணப் பகுதியும், மொழிப் பயிற்சியும் அமைந்துள்ளன.

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்,
**வித்துவான். ஆ. குருசாமி ஐயா அவர்கள்,**
*தலைமைத் தமிழ் ஆசிரியர், நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,*
கரூர்.

Sarasvati Mahal Library, Thanjavur
T017555

**தமிழ்நாடு நூற்பதிப்பகம்**
உறையூர் - திருச்சிராப்பள்ளி.

1955 [விலை 0—8—0

உரிமை பதிவு]

முதற் பதிப்பு — 1954.
இரண்டாம் பதிப்பு — 1955.

*Approved by the Madras Text Book Committee*
*(For class use for High School Vth FormPart I.)*
*Vide fort St. George Gazette Page 26 Dated 4—5—55.*

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.

# முன்னுரை

**தமிழ் மொழியின்** இயற்கைத் தன்மையையும் மேன்மையையும் நன்கு அறிவதற்கும், தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள நயங்களையும் சுவைகளையும் உணர்ந்து இன்பம் நுகர்வதற்கும், தமிழில் புதிய கலைகளையும் காவியங்களையும், பிற நூல்களையும் தமிழ் முறைப்படி ஆக்கி அமைப்பதற்கும் தமிழ் இலக்கண அறிவு மிகவும் பயன் படுவதாகும்.

தமிழ், நாட்டு மொழியாகவும் உயர்நிலைப்பள்ளிகளில் முதன் மொழியாகவும் அமைந்துள்ளது. இனி ஆட்சி மொழியாகவும் கல்லூரிகளில் பாடமொழியாகவும் அமைய வேண்டுமென அறிஞர்கள் விரும்புகின்றார்கள். இதற்குத் தமிழில் எல்லாவிதமான அறிவியல் கலை நூல்களையும் இயற்றி மொழியை வளம்படுத்த வேண்டும். ஆதலால், தமிழ் மாணவர்களும் மற்றவர்களும் தமிழ் இலக்கண அறிவைப் பெறவேண்டும். தகுந்த பணி ஆற்றவேண்டும். இத்தகைய உயரிய நோக்குடனும், இதற்கு உறுதுணையாகவும் இவ்விலக்கணம் எழுதப்பெற்றுள்ளது. இதற்கேற்றபடி அரசாங்கத்தார் பாடதிட்டமும் அமைந்துள்ளது.

**நான்கு, ஐந்து, ஆறும்** படிவங்களின் பொதுவும் சிறப்புமாகிய பகுதிகளுக்கு (IV, V & VI From Part I & II) அரசாங்கத்தார் 27–1–54–ல் புதிதாகத் திருத்தி அமைத்து வெளியிட்ட இலக்கண பாடதிட்டத்தை முற்றும் தழுவி இவ்விலக்கணம் எழுதப்பெற்றது. கீழ்ப்படிவங்களில் (I, II & III From) தெளிவான இலக்கண அறிவு அமையாவிடினும், நான்காம் படிவத்திற்கு வந்த மாணவர்களுக்கு அடிப்படையான இலக்கண அறிவு நன்கு அமைய வேண்டுமெனக்கருதி ஒவ்வொரு பகுதியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படிவத்திலும் ஒவ்வொரு பகுதியிலும் முன்னுல் விரிவாக விளக்கியவற்றைப் பின்னுல் சுருக்க மாகவும், பின்னுல் விளக்கவேண்டியவற்றை முன்னுல் சுருக்கமாகவும் தொடர்புடன் முறைப்படுத்தி எழுதி அமைக்கப்பட்டுள்ளது. இலக்கணம், மொழியில் இயற்கையாக அமைந்துள்ள முறைகளை முன் எடுத்துக்காட்டி விளக்கிப் பின் அதற்குரிய விதிகளை அமைத்துக்கொள்ளும் முறையில் (உதாரண விளக்க விதி அமைப்பு முறையில்) எழுதப்பெற்றுள்ளது. விதி அமைப்பு மனத்தில் பதியும் வண்ணம் தனியாக அடியில் தடித்த எழுத்துக்களால் அமைத்தும், மனப் பாடம் செய்து மறவாது வைத்துக் கொள்ளும் பொருட்டு விதிகளை விளக்கும் சூத்திரங்களை இறுதி யில் அமைத்தும் விளக்கப்பட்டுள்ளது.

பள்ளியிறுதிப் படிப்பில் பொதுவும் சிறப்பு மாகிய இலக்கணப் பகுதிகளில் முதல் தரமாகத் தேர்ச்சிபெறவும், பின் கல்லூரிப்படிப்பில் தமிழ்ப் பகுதி எடுத்துப் படித்துத் தேர்ச்சி பெறவும், தமிழ்க் கல்லூரிகளில் புலவர் – வித்துவான் வகுப்பில் இலக் கணத்தில் தேர்ச்சி பெறவும், வீட்டிலிருந்தும் வேறு தொழில்களிலிருந்தும் தமிழ் இலக்கிய இலக்கணங் களைத் தாமே படித்து ஆராய்ந்து புலமை பெற்றுத் தமிழின்பம் நுகரவும், தமிழில் பல நூல்களை இயற்றித் தமிழ்மொழிக்குப் பணி ஆற்றவும் எமது இலக்கணம் மிகுதியும் துணை செய்யுமெனத் திண்ணமாக எண்ணு கின்றேன்.

ஆதலால், அரசாங்கத்தாரும் கல்வி நிலையத் தலைவர்களும் ஆசிரியர்களும் ஆதரவளித்து இத் துறையில் இன்னும் பணியாற்றும் வண்ணம் ஊக்க மளிக்க வெண்டுமெனவும், மாணவர்களும் மற்றத் தமிழ் மக்களும் விரும்பிப் பயின்று பயன்பெறவேண்டு மெனவும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

**ஆசிரியன்.**

27—1—54-ஐ கெஜட்டில் புதிதாகத் திருத்தி வெளியிட்ட இலக்கண பாடதிட்டம். பொதுத் தமிழ்.

# பொருள் அடக்கம்


I. எழுத்து — பக்கம்

1. குற்றியலுகரம் 7
2. முற்றியலுகரம் 10
3. குற்றியலிகரம் 11
4. அளபெடை-உயிரளபெடை, ஒற்றளபெடை. 13

II. சொல்

1. பெயர்ச்சொல் 16
   (i) காரணப் பெயர், இடுகுறிப்பெயர், காரண இடுகுறிப்பெயர் 16
   (ii) ஆகு பெயர் வகைகளுள் சில 17
   (iii) வேற்றுமை உருபுகளும், பொருளும் 20
   (iv) வேற்றுமை உருபு ஏற்கும்போது வேறுபடும் பெயர்கள் 25
2. வினைச்சொல் 27
   (i) பகுபத உறுப்புக்கள் 27
   (ii) வினைமுற்று வகைகள் 29
   (iii) முற்றெச்சம் 32
3. இடைச்சொல் 33
4. உரிச்சொல் 35

III. பொது வழக்கு - இயல்பு வழக்கு. 36
தகுதி வழக்கு 37

IV. புணர்ச்சி

1. மூவகை விகாரங்கள் 39
2. குற்றுகரப் புணர்ச்சி 40
3. பண்புத் தொகைப் புணர்ச்சி 42

V. யாப்பு

1. வெண்பாவின் பொதுவிலக்கணம். 44
2. ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் 45

VI. அணி

1. சிலேடை அணி 46
2. மடக்கு அணி 47

VII. மொழிப் பயிற்சி

I. வாக்கிய வகைகள் 49
II. வாக்கிய மாற்றம் 50
III. வாக்கியப் பிழைகளும், திருத்தமும். 52
IV. வழூஉச் சொற்களும், திருத்தமும். 53
V. சொற்பொருத்தம் 54
VI. சொற்றொடர் மரபுத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் 54
VII. உவமைகளையும், பழமொழிகளையும் வாக்கியத்தில் அமைத்தல். 55
VIII. நிறுத்தக் குறிகள் 57
கீழ்க்கோடிடல், இடைப்பிறவைப்புக்குறி. 63
IX. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும். 64

# கலைத் தமிழ் இலக்கணம்

ஐந்தாம் படிவம் (Form V)

**பகுதி I பொது (Part I)**

# I. எழுத்து

## 1. குற்றியலுகரம்

நாடு, முரசு, பட்டு, பஞ்சு, சால்பு, எஃகு.

இச்சொற்களின் இறுதியில் வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வந்துள்ள உகரம் ஓசையிற் குறைந்து ஒலிக்கின்றது. இது குற்றியலுகரம் எனப்படும்.

**தனிக்குறிலல்லாத மற்றைய எழுத்துக்களை ஈற்றயல் எழுத்துக்களாகப் பெற்றுவரும் மொழிகளின் இறுதியில் வல்லின மெய்களின்மேல் ஏறிவரும் உகரம் ஓசை குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் ஆகும்.**

குற்றியலுகரத்தைத் தொடர்ந்து ஈற்றியலில் வரும் எழுத்துக்களைக் கொண்டு அதனை **ஆறு வகையாகப்** பகுக்கலாம்.

*1.* பாகு, **தூசு**, ஆடு, காது, ஆறு.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் தனி உயிர்மெய் நெடில், உயிர் நெடில்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது **நெடிற்றொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

**தனி நெடில்களைத் தொடர்ந்து வருவது நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

குறிப்பு: நெடிற்றொடர் ஈரெழுத்து மொழிகளில்தான் வரும். இரண்டெழுத்துக்களுக்கு மேற்படின் ஈற்றயலெழுத்து நெடிலாயினும் அது உயிர்த் தொடர் ஆகிவிடும்.

2. எஃகு, கஃசு, அஃது.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் ஆய்த வெழுத்துக்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**ஆய்தவெழுத்துக்களைத் தொடர்ந்து வருவது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

3. சருகு, பரிசு, அகடு, வயது, மரபு, மிலாறு.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து வருவது உயிர்த் தொடக் குற்றியலுகரம் ஆகும்.**

குறிப்பு: மேற்கண்ட சொற்களில் ஈற்றயலில் வந்துள்ளவை உயிர் மெய்யெழுத்துக்களாயினும் அவற்றைப் பிரித்தால் உயிர்கள்தாம் குற்றுகரத்தைத் தொடர்ந்து உள்ளன. ஆதலால், உயிர்த்தொடர் எனப் பெயர்பெற்றது.

4. சுக்கு, கச்சு, வட்டு, முத்து, உப்பு, புற்று.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் வல்லின மெய்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**வல்லினமெய்களைத் தொடர்ந்து வருவது வன்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

5. சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் மெல்லின மெய்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது மென்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**மெல்லினமெய்களைத் தொடர்ந்து வருவது மென்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

6. நல்கு, போழ்து, மார்பு.

இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரம் இடையின மெய்களைத் தொடர்ந்து வந்துள்ளது. ஆதலின், இது இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**இடையின மெய்களைத் தொடர்ந்து வருவது இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

குற்றியலுகரம் ஈற்றயலில் தொடர்ந்து வரும் எழுத்துக்களைக் கொண்டு நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகைப்படும்.

**குறிப்பு**: புணர்ச்சியில் குற்றுகரப் புணர்ச்சியின்கண் ஏற்படும் மாறுபாடுகளைக் கருதி, குற்றுகரம் மேற்கண்ட வண்ணம் ஆறுவகையாகக் கொள்ளப்பட்டது.

ஈற்றயலில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டு முப்பத்தாருகக் கொள்ளுதலும் உண்டு.

அவையாவன: தனி நெடில் ஏழு, இடையில் வராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்று, வல்லினமெய் ஆறு, மெல்லினமெய் ஆறு, வல்லினத்தோடு மயங்காத வகரம் நீங்கிய இடையின மெய் ஐந்து, ஆய்தம் ஒன்று ஆக முப்பத்தாறு எழுத்துக்களை அடுத்து வருவதால் முப்பத்தாறு ஆகும்.

நன்னூல்: நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

## 2. முற்றியலுகரம்

1. உ, கு, து, பு, று, மு, வு, யு, ரு.

இவ்வாறு தனித்து வரும் உகரம் ஓசை குறையவில்லை.

2. புகு, பசு, படு, அது, தபு, அறு.

இவ்வாறு தனிக்குறிலை அடுத்து, இறுதியில் வல்லின மெய்யின்மேல் வந்துள்ள உகரமும் ஓசை குறையவில்லை.

3. தும்மு, கணு, கதவு, எரு.

இவ்வாறு இறுதியில் மெல்லின இடையின மெய்களின்மேல் வந்துள்ள உகரமும் ஓசை குறைய வில்லை.

இவ்வாறு ஓசை குறையாமல் தனக்குரிய ஒரு மாத்திரையுடன் ஒலிக்கும் உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

**தனக்குரிய ஓசையில் குறையாத உகரம் முற்றியலுகரம் ஆகும்.**

## 3. குற்றியலிகரம்

நாடு + யாது = நாடியாது?

எஃகு + யாது = எஃகியாது?

வந்தது + யார் = வந்தியார்?

நிலைமொழி யிறுதியில் உள்ள குற்றுகரம் வருமொழி முதலில் 'யா' என்னும் எழுத்துவர இகரமாகத் திரிந்து வந்தது. இவ்வாறு திரிந்து வந்த இகரம் ஓசை குறைந்து ஒலிக்கிறது. ஆதலின், இது குற்றியலிகரம் எனப்படும்.

கேள் + மியா = கேண்மியா.

செல் + மியா = சென்மியா.

இவ்வாறு முன்னிலை ஏவலுடன் சேர்ந்துவரும் 'மியா' என்னும் முன்னிலை அசைச்சொல்லின்கண் மகர மெய்யில் உள்ள இகரம் தன் ஒரு மாத்திரையிற் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கிறது. ஆதலின், இதுவும் குற்றியலிகரம் எனப்படும்.

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம். ஓசை குறைந்த இயல்பை உடைய இகரம்.

வருமொழி முதலில் யகரம் வரும்போது நிலைமொழி யிறுதியில் உள்ள குற்றியலுகரம் திரிந்து வந்த இகரமும், முன்னிலை ஏவலுடன் வரும் 'மியா' என்னும் அசைச் சொல்லில் மகரத்தின்மேல் உள்ள இகரமும் ஓசை குறைந்து ஒலிக்கும் குற்றியலிகரம் ஆகும்.

குறிப்பு: குற்றுகரம் திரிந்து வந்த இகரம், அசைச் சொல் மியாவின் இகரம் எனக்குற்றியலிகரம் இரண்டு வகைப்படும்.

குற்றியலுகரம் முப்பத்தாறும் திரிந்து வந்த குற்றியலிகரம் முப்பத்தாறும், மியாவின் இகரம் ஒன்றும் ஆகக் குற்றியலிகரம் முப்பத்தேழு எனக் கொள்ளுதலும் உண்டு.

### முற்றியலிகரம்

இவ்வாறு இன்றி மற்ற இடங்களில் தனித்தும் மெய்களோடு சேர்ந்தும் மொழிகளில் வருவன யாவும் முற்றியலிகரங்கள் ஆகும்.

**நன்னூல்:** யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச் சொன் மியாவின் இகரமும் குறிய.

## 4. அளபெடை

சொற்களில் சில எழுத்துக்கள் சிலவிடங்களில் தமக்குரிய அளவைக்கடந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பது **அளபெடை** எனப்படும்.

செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைக்கும்பொருட்டு உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் அளபெடுத்துவரும். அவை முறையே **உயிரளபெடை, ஒற்றளபெடை** எனப்படும்.

### உயிரளபெடை

தெய்வம் தொழாஅள். நற்றுள் தொழாஅரெனின். இவற்றில் 'ழா' என்பதில் உள்ள 'ஆ' என்ற நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரையின் மிகுந்து மூன்று மாத்திரையாக ஒலிக்கிறது. அதனை அறிதற்கு அதன் இனமாகிய 'அ' என்ற குறில் அருகில் எழுதப் பட்டுள்ளது.

இவ்வாறு ஓசை குறையுமிடத்து உயிர் நெடில்கள் ஏழும் அளபெடுத்துவரும். அவற்றை அறிய அவ்வவற்றின் இனக்குறில் அருகில் எழுதப்படும். இவ்வாறு வருவது **உயிரளபெடை** எனப்படும்.

**உயிரெழுத்து தனக்குரிய அளவின் மிகுந்து ஒலிப்பது உயிரளபெடை ஆகும்.**

குறிப்பு: உயிர் + அளபு + எடை = உயிரளபெடை. உயிர் மிகுதியாக அளபு எடுப்பது.

செய்யுளில் ஓசை குறையுமிடத்து நெடில் அளபெடுப்பது செய்யுள் இசைநிறையளபெடை எனப்படும்.

ஓசை குறையாவிடினும் இன்னோசையின் பொருட்டு சொல்லில் உள்ள குறில் நெடிலாகி அளபெடுத்து வருதலும் உண்டு. அது இன்னிசையளபெடை எனப்படும்.

ஓ ஓ தல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆ அ துமென்னு மவர்.

இவை செய்யுளிசை நிறை அளபெடைகள்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கெடுப்பதும், எடுப்பதும் என்ற சொற்களில் 'து' என்பதில் உள்ள 'உ' என்ற குறில் 'ஊ' என நெடிலாகி அளபெடுத்து வந்துள்ளது. இவ்வாறு வருவது இன்னிசையளபெடை.

நன்னூல் : இசை கெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

## ஒற்றளபெடை

இலங்ங்கு வெண்பிறை

வெஃஃகு வார்க்கில்லை வீடு

இவற்றில் 'ங்' என்ற மெய்யும், 'ஃ' என்ற ஆய்தமும் அரைமாத்திரையின் மிகுந்து ஒருமாத்திரை யாக ஒலிக்கின்றன. அவற்றை அறிவதற்கு அவ்வெழுத்துக்களே அருகில் மீண்டும் எழுதப்பட்டன.

இவ்வாறு ஓசை குறையுமிடத்து ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் என்னும் பத்து மெய்களும், ஆய்தமும் அளபெடுத்து வரும். அவற்றை அறிய அவ்வவ் வெழுத்துக்கள் அருகில் எழுதப்படும். இவ்வாறு வருவது ஒற்றளபெடை எனப்படும்.

**ஒற்று தனக்குரிய அளவின் மிகுந்து ஒலிப்பது ஒற்றளபெடை ஆகும்.**

**குறிப்பு:** ஆய்தம் அரைமாத்திரையுடையது ஆதலின் ஒற்றுடன் சேர்த்துக் கூறப்பட்டது.

உயிர் நெடிலுக்கு மாத்திரை இரண்டு. அளபெடுத்து வரும்போது அருகில் எழுதப்படும் குறில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாத்திரை வீதம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மெய்க்கு மாத்திரை அரை. அளபெடுத்து வரும்போது அருகில் எழுதப்படும் மெய் ஒவ்வொன்றிற்கும் அரை மாத்திரை வீதம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இசை பாடும்போதும், விளிக்கும்போதும், பண்டமாற்றுதலில் கூவி விற்கும்போதும், புலம்பும்போதும் உயிரும் மெய்யும் அளவிறந்து நீண்டு ஒலிக்கும்.

**நன்னூல்:** ங ஞ ண நமன வ ய ல ள வாய்தம்
அளபாம் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.
ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்.

# II. சொல்

## 1. பெயர்ச் சொல்

பெயர்கள் **காரணப்பெயர்**, **இடுகுறிப்பெயர்**, **காரண விடுகுறிப்பெயர்** என்றும், **பொதுப்பெயர்**, **சிறப்புப்பெயர்** என்றும் பலவகைப்படும்.

### (i) காரணப்பெயர்

**முக்காலி**—மூன்று கால்களையுடையது முக்காலி.

**பறவை**—பறக்கும் இயல்புடையது பறவை.

இவ்வாறு காரணம் பற்றி வழங்கும் பெயர் **காரணப்பெயர்** எனப்படும்.

**ஒரு பொருளுக்குக் காரணம்பற்றி வழங்கும் பெயர் காரணப்பெயர் ஆகும்.**

### இடுகுறிப் பெயர்

**மரம், மண், கல்.** காரணமின்றி வழங்கும் பெயர்கள்.

இவ்வாறு காரணமின்றி தொன்றுதொட்டு இடப்பட்ட குறியாய் வழங்கிவரும் பெயர் **இடுகுறிப்பெயர்** எனப்படும்.

**ஒரு பொருளுக்குக் காரணமின்றி தொன்றுதொட்டு இடப்பட்ட குறியாய் வழங்கிவரும் பெயர் இடுகுறிப்பெயர் ஆகும்.**

### காரண இடுகுறிப்பெயர்

**நாற்காலி** இச்சொல் காரணம் கருதியபொழுது நான்கு கால்களையுடைய பொருள்கள் எல்லாவற்றையும் குறிக்குமாயினும், காரணம் கருதாதபொழுது இடுகுறியாய் உட்காருதற்குரிய நாற்காலியையே

குறிக்கின்றது. இவ்வாறு வருவது **காரண இடுகுறிப் பெயர்** எனப்படும்.

**முள்ளி, முக்கணன்** முதலான பெயர்கள் இவ்வாறு வரும்.

**காரணம் கருதினல் பல பொருள்களைக் குறிப்பதாயினும் இடு குறியாய் ஒரு பொருளுக்கே வழங்கிவரும் பெயர் காரண இடுகுறிப் பெயர் ஆகும்.**

### பொதுப் பெயர், சிறப்புப் பெயர்.

மெற்கண்ட காரணப் பெயர், இடுகுறிப்பெயர்கள் பல பொருள்களுக்குப் பொதுவாய் வரின் **பொதுப்பெயர்** எனப்படும்; ஒரு பொருளுக்கே சிறப்பாய் வரின் **சிறப்புப் பெயர்** எனப்படும்.

**காட்டு :** மரம். இடுக்குறிப்பொதுப்பெயர்
தென்னே. இடுகுறிச் சிறப்புப்பெயர்
அணி. காரணப் பொதுப்பெயர்
வளேயல். காரணச் சிறப்புப்பெயர்

**பல பொருள்களுக்குப் பொதுவாய் வருவது பொதுப் பெயர் ஆகும்; ஒரு பொருளுக்கே சிறப்பாய் வருவது சிறப்புப் பெயர் ஆகும்.**

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர் என்ப் பெயர்ச் சொற்கள் நான்கு வகைப்படும்.

### (ii) ஆகுபெயர் வகைகளுள் சில

ஒரு பொருளின் பெயர் அதனேடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகிவருவது **ஆகுபெயர்** எனப் படும். அது பொருளாகு பெயர் முதலாகப் பல வகைப்படும்.

1. பொருளாகு பெயர்: தாமரை முகம்.

தாமரை என்னும் முதற்பொருளின் பெயர், அதன் சினையாகிய மலருக்கு ஆகி வந்தமையால் பொருளாகு பெயர் அல்லது முதலாகு பெயர் ஆகும்.

2. இடவாகு பெயர்: அறிஞரை உலகம் புகழும்.

உலகம் என்னும் இடத்தின் பெயர், உலகில் உள்ள மக்களுக்கு ஆகி வந்தமையால் இடவாகு பெயர் ஆகும்.

3. காலவாகு பெயர்: கார் அறுத்தான்.

கார் என்னும் காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்தமையால் கால வாகு பெயர் ஆகும்.

4. சினையாகு பெயர்: வெற்றிலை நட்டான்.

வெற்றிலை என்னும் சினைப்பொருளின் பெயர், அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்தமையால் சினையாகு பெயர் ஆகும்.

5. குணவாகு பெயர்: வெள்ளை உடுத்தினன்.

வெள்ளை என்னும் நிறத்தின்-குணத்தின் பெயர், அந்நிறத்தினையுடைய உடைக்கு ஆகி வந்தமையால் குணவாகு பெயர் அல்லது பண்பாகு பெயர் ஆகும்.

6. தொழிலாகு பெயர்: வற்றல் உண்டான்.

வற்றல் என்னும் தொழிலின் பெயர், அத்தொழிலை அடைந்த-வற்றிய பொருளுக்கு ஆகி வந்தமையால் தொழிலாகு பெயர் ஆகும்.

இவை பொருட்பெயர் முதலான அறுவகைப் பெயர்களின் அடியாக வந்த ஆகுபெயர்கள் ஆகும். இவை நான்காம் படிவத்தில் நன்கு விளக்கப்பட்டன.

## அளவை ஆகு பெயர்கள்

*1.* **எண்ணலளவையாகு பெயர்:** அணுவுக்கு நான்கு கொடு

நான்கு என்னும் எண்ணல் அளவையின் பெயர், அவ்வெண்ணிக்கையுடைய பொருளுக்கு ஆகி வந்தமையால் எண்ணலளவை ஆகு பெயர் ஆகும்.

*2.* **எடுத்தலளவையாகு பெயர்:** ஒரு சேர் கொடு.

சேர் என்னும் எடுத்தல் - நிறுத்தல் அளவையின் பெயர், அந்நிறையுடைய பொருளுக்கு ஆகி வந்தமை யால் எடுத்தலளவை ஆகு பெயர் ஆகும்.

3. **முகத்தலளவையாகு பெயர்:** உண்பது நாழி.

நாழி என்னும் முகத்தல் அளவையின் பெயர், நாழி அரிசியின் உணவுக்கு ஆகி வந்தமையால் முகத்த லளவை ஆகு பெயர் ஆகும்.

*4.* **நீட்டலளவை யாகு பெயர்:** உடுப்பது நான்கு முழம். முழம் என்னும் நீட்டல் அளவையின் பெயர், அந்நீளமுடைய ஆடைக்கு ஆகி வந்தமையால் நீட்டலளவை ஆகு பெயர் ஆகும்.

இவை அளவுப் பெயர்களின் அடியாக வந்த ஆகு பெயர்கள் ஆகும். பிற ஆகு பெயர்களைச் சிறப்புப் பகுதியில் அறியலாம்.

### (iii) வேற்றுமை உருபுகளும், பொருளும்.

வேற்றுமைகள் தத்தமக்குரிய உருபுகளுடன் பல வகைப் பொருள்களில் வரும். அவ்வாறு வருவன **வேற்றுமைப் பொருள்** எனப்படும்.

### முதல் வேற்றுமை

| | |
|---|---|
| சாத்தனர் வந்தார். | வினையைக் கொண்டு முடிந்தது. |
| சாத்தனர் புலவர். | பெயரைக் கொண்டு முடிந்தது. |
| சாத்தனர் யார்? | வினவைக் கொண்டு முடிந்தது. |

திரிபில்லாத பெயர் எழுவாயாக வருவது முதல் வேற்றுமை ஆகும்; வினையையும், பெயரையும், வினவையும் பயனிலையாகக்கொண்டு வருதல் இதன் பொருளாகும்.

எழுவாய்—கருத்தா, வினை முதல், செய்பவன்.

நன்னூல்: எழுவாய் உருபு திரிபில் பெயரே;
வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே.

### இரண்டாம் வேற்றுமை

| | |
|---|---|
| வீட்டைக் கட்டினன். | ஆக்கப்படு பொருள். |
| கோட்டையை இடித்தான். | அழிக்கப்படு பொருள். |
| ஊரை அடைந்தான். | அடையப்படு பொருள். |
| தீமையை விட்டான். | நீக்கப்படு பொருள். |
| புலியை நிகர்த்தான். | ஒப்புமைப் பொருள். |
| அறிவை உடையான். | உடைமைப்பொருள். |

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ. அது செயப்படு பொருளாய் **ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒப்பு, உடமை** முதலான வகைகளில் வரும்.

**நன்னூல் :** இரண்டாவதன் உருபு ஐயே ; அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடமை ஆதி யாகும்.

## மூன்றும் வேற்றுமை

| | |
|---|---|
| கத்தியால் சீவினன். வாளான் வெட்டினன். | 'ஆல், ஆன்' உருபுகள் கருவிப் பொருளில் வந்தன. |
| தச்சனல் ஆகிய வீடு. அரசனுகிய கோவில். | 'ஆல், ஆன்' உருபுகள் கருத்தாப் பொருளில் வந்தன. |
| தந்தையோடு மைந்தன் வந்தான். கந்தனெடு கண்ணன் சென்ருன். | 'ஒடு, ஓடு' உருபுகள் உடனிகழ்ச்சியில் வந்தன. |

மூன்றும் வேற்றுமையின் உருபுகள் **ஆல், ஆன் ஒடு, ஓடு** என்பன. அவை **கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப்** பொருள்களில் வரும்.

**நன்னூல் :** மூன்ருவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு ;
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்.

## நான்காம் வேற்றுமை

| | |
|---|---|
| வறியவர்க்கு வழங்கினன். | கொடைப் பொருள். |
| பாம்புக்குப் பகை கீரி. | பகைப் பொருள். |
| வேலனுக்கு நண்பன் பாலன். | நேர்ச்சி-நட்புப் பொருள். |
| அறிஞர்க்குத் தகுந்தது அடக்கம். | தகவு-தகுதிப்பொருள். |

தாலிக்குப் பொன் தந்தான். அதுவாதல் பொருள்.
கூலிக்கு வேலை செய்தான். நிமித்தப் பொருள்.
கோவலனுக்கு மனைவி கண்ணகி. முறைப் பொருள்.

நான்காம் வேற்றுமையின் உருபு கு. அது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலான பொருள்களில் வரும்.

நன்னூல் : நான்கா வதற்குரு பாகும் குவ்வே ;
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறை யாதியின் இதற்கிதெனல் பொருளே.

## ஐந்தாம் வேற்றுமை

ஊரின் நீங்கினன். நீங்கற் பொருள்.
பாலில் வெளிது பஞ்சு. ஒப்புப் பொருள்.
இந்தியாவின் வடக்கு இமயம். எல்லைப் பொருள்.
கருணையில் பெரியார் காந்தி. ஏதுப்பொருள்.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன. அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருள் களில் வரும்.

நன்னூல் : ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும் ;
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பெருளே.

## ஆறும் வேற்றுமை

### தற்கிழமை

முருகனது செம்மை. பண்புத் தற்கிழமை.
எனது தலை. என கைகள். உறுப்புத் தற்கிழமை.
பசுவினது மந்தை. ஒன்றன் கூட்டத் தற்கிழமை.
பறவைகளது கூட்டம். பலவின் ஈட்டத் தற்கிழமை.
நெல்லினது பொரி. திரிபின் ஆக்கத் தற்கிழமை.

## பிறிதின் கிழமை

முருகனது வேல். பொருட் பிறிதின் கிழமை.
முருகனது மலை. இடப் பிறிதின் கிழமை.
முருகனது நாள். காலப் பிறிதின் கிழமை.

ஆறும் வேற்றுமையின் உருபுகள் **அது, ஆது, அ** என்பன. அவை **பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம்** என்னும் ஐந்து **தற்கிழமைப்** பொருள்களிலும், **பொருள், இடம், காலம்** என்னும் மூன்று **பிறிதின் கிழமைப்** பொருள்களிலும் வரும்.

**தற்கிழமை:** தன்னிடமிருந்து பிரிக்க முடியாத உரிமையுடையது.

**பிறிதின் கிழமை:** தன்னிடமிருந்து பிரிந்து வேருகக் கூடிய உரிமையுடையது.

**நன்னூல்:** ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம்; பண்பு உறுப்பு
ஒன்றன்கூட்டம் பலவினீட்டம்
திரிபின் ஆக்கமாம் தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

## ஏழாம் வேற்றுமை

மணியில் ஒளி. பொருள் தற்கிழமை.
மரத்தில் கிளி. பொருட் பிறிதின் கிழமை.
நிலத்தில் வீடு. இடத் தற்கிழமை
காட்டில் புலி. இடப் பிறிதின் கிழமை.
நாளின்கண் நாழிகை. காலத் தற்கிழமை.

நாளின்கண் வேலை. காலப் பிறிதின் கிழமை.
கையில் விரல் சினைத் தற்கிழமை.
விரலில் மோதிரம். சினைப் பிறிதின் கிழமை.
செம்மையில் அழகு. பண்புத் தற்கிழமை.
முதுமையில் இன்பம். பண்புப் புறிதின் கிழமை.
ஆட்டத்தில் மெய்ப்பாடு. தொழில் தற்கிழமை.
ஆட்டத்தில் பாட்டு. தொழில் பிறிதின் கிழமை.

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், கண், இடம் முதலானவை. அவை பொருள் முதலாறினையும் இடமாகக் கொண்டு தற்கிழமை, பிறிதின் கிழமை இரண்டினும் வரும்.

நன்னூல் : ஏழன் உருபு கண்ணாதி யாகும்;
பொருள் முதலாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப.

## எட்டாம் வேற்றுமை

நம்பி—நம்பி! வா.
நங்கை—நங்கை! சொல். } இயல்பாய் வந்தது.

அன்னை—அன்னாய்! ஈறு திரிந்தது.
நண்பன்—நண்ப! ஈறு குறைந்தது.
மகன்—மகனே! ஈறு மிகுந்தது.
மக்கள்—மக்காள்! ஈற்றயல் திரிந்தது.

பெயர்கள் விளிப்பொருளில் வருவது எட்டாம் வேற்றுமை. இது விளி வேற்றுமை எனவும் பெயர் பெறும். பெயர்கள் விளியேற்கும்போது அண்மை விளியில் இயல்பாகவும் ஈறு குறைந்தும் வரும்;

சேய்மை விளியில் ஈறு திரிதல், ஈறு மிகுதல், ஈற்றய லெழுத்துத் திரிதல் முதலான மாறுபாடுகளைப் பெற்று வரும்.

ஒரு சொல் இவற்றில் பல விகாரங்களைப் பெற்றும் வரும்.

**காட்டு:** மன்னன்-மன்னா! ஈறு கெட்டு அயல் திரிந்தது. ஐயன்—ஐயாவே! ஈறு கெட்டு அயல் திரிந்து ஏ மிகுந்தது.

**குறிப்பு:** முதல் வேற்றுமைப் பெயர்க்கும், இயல்பு விளிக்கும் சொல்லால் வேற்றுமை இன்றேனும் ஒலியால் பொருள் வேற்றுமை உண்டு. **அண்மைவிளி**—அருகில் உள்ளவரை அழைப்பது. **சேய்மைவிளி**—தொலைவில் உள்ளவரை அழைப்பது.

**நன்னூல்:** எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபுமாம்; பொருள் படர்க்கையோரைத்
தன்முகமாகத் தான் அழைப்பதுவே.

## (iv) வேற்றுமை உருபு ஏற்கும்போது வேறுபடும் பெயர்கள்.

1. நான் + ஐ = என்னை. நாம் + ஐ = நம்மை.
யான் + ஐ = என்னை. யாம் + ஐ = எம்மை.
நாங்கள்-யாங்கள் + ஐ = எங்களை.

தன்மைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது 'நான், யான்' என்பவை 'என்' என்றும், 'நாம்,

யாம்' என்பவை 'எம்' என்றும், 'நாங்கள், யாங்கள்' என்பவை 'எங்கள்' என்றும் திரியும்.

2. நீ + ஐ = நின்னை, உன்னை.
நீர், நீயிர், நீவிர் + ஐ = நும்மை, உம்மை.
நீங்கள் + ஐ = நுங்களை, உங்களை.

முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது 'நீ' என்பது 'நின், உன்' என்றும், 'நீர், நீயிர், நீவிர்' என்பவை 'நும், உம்' என்றும், 'நீங்கள்' என்பது 'நுங்கள், உங்கள்' என்றும் திரியும்.

3. தான் + ஐ = தன்னை தான் + கு = தனக்கு.
தாம் + ஐ = தம்மை. தாம் + கு = தமக்கு.
தாங்கள் + ஐ = தங்களை. தாங்கள் + கு = தங்களுக்கு.

வேற்றுமை ஏற்கும்போது 'தான்' என்பது 'தன்' என்றும், 'தாம்' என்பது 'தம்' என்றும், 'தாங்கள்' என்பது 'தங்கள்' என்றும் திரியும். எல்லாப் பெயர்களும் நான்காம் வேற்றுமை ஏற்கும் போது அகரத்தையும், உகரத்தையும் சாரியையாகப் பெற்று வரும்.

நன்னூல்: தான் தாம் நாம் முதல் குறுகும்; யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம்; பிற
குவ்வின் அவ் வரும் நான்காறிரட்டல.

# 2. வினைச் சொல்

## 1. பகுபத உறுப்புக்கள்

| பகுபதம் | பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| முருகன். | முருகு + | | | | அன் |
| அறிஞன். | அறி + | | ஞ் + | | அன் |
| உண்டாள். | உண் + | | ட் + | | ஆள் |
| உண்டனர். | உண் + | | ட் + | அன் + | அர் |
| படித்தனன். | படி + | த் + | த் + | அன் + | அன் |
| நடந்தனர். | நட + | (த்)-ந் + | த் + | அன் + | அர் |

நடந்தனர் என்பதில் சந்தியால் வந்த தகர மெய் நகர மெய்யாகத் திரிந்து வந்தது மெலித்தல் விகாரம்.

**பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்** என்னும் ஆறும் பகுபதத்தின் உறுப்புக்கள் ஆகும்.

**பகுதி**: பகுபதத்தில் முதலில் நிற்பது **பகுதி** அல்லது **முதனிலை** எனப்படும். **பெயர், வினை, இடை, உரிச்சொற்களைப்** பகுதியாகப் பெற்று வரும் பகுபதங்கள் அவ்வப்பெயர்களைப் பெற்றுவரும்.

வினைப் பகுதி தொழிலை உணர்த்தும்.

**உண், படி, நட** இப்பகுதிகள் தொழிலை உணர்த்தின.

**விகுதி**: பகுபதத்தில் இறுதியில் நிற்பது **விகுதி** அல்லது **இறுதிநிலை** எனப்படும். வினைமுற்று விகுதி திணை, பால், எண், இடம் இவற்றை உணர்த்தும்.

எச்ச விகுதி ஆயின் பொதுவாய் நின்று எச்சத்தை மட்டும் உணர்த்தும்.

**அன், ஆள், அர்** — இவை திணை பால்களை உணர்த்தின.

**இடை நிலை**: பகுதிக்கும் விதிக்கும் இடையில் நிற்பது இடை நிலை எனப்படும். அது **பெயரிடை நிலை**, **வினையிடை நிலை** என இரண்டு வகைப்படும். வினை யிடை நிலைகள் காலத்தை உணர்த்தும்.

வலைஞன். ஞ் பெயரிடைநிலை.
செய்தான். த் இடைநிலை இறந்தகாலம் காட்டியது.
செய்கின்றான். கின்று இடைநிலை நிகழ்காலம் காட்டியது.
செய்வான். வ் இடைநிலை எதிர்காலம் காட்டியது.

**சாரியை**: இடைநிலைக்கும், விகுதிக்கும் இடை யில் சார்ந்து வருவது **சாரியை** எனப்படும்.

**சந்தி**: பகுதியோடு இடைநிலை புணரும்போது தோன்றுவது **சந்தி** எனப்படும்.

**விகாரம்**: சந்தியாவது பகுதியாவது மாறி வருவது **விகாரம்** எனப்படும்.

நடந்தான். த் என்னும் சந்தி ந் ஆனது விகாரம். கண்டான். **காண்** என்னும் பகுதி **கண்** என விகார மாயிற்று.

**நன்னூல்**: பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்.

### (ii) வினைமுற்று வகைகள்

தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என வினை முற்றுக்கள் ஐந்து வகைப்படும்.

#### 1. தன்மை வினைமுற்று

| | |
|---|---|
| **செய்வல். செய்வன்.**<br>**செய்வென். செய்வேன்.** | தன்மை ஒருமை வினை முற்று விகுதிகள்<br>**அல், அன், என், ஏன்.** |
| செய்தனம். செய்தாம்<br>செய்தனெம். செய்தேம.<br>செய்தோம் | தன்மைப்பன்மை வினை முற்று விகுதிகள்<br>**அம், ஆம், எம், ஏம், ஓம்.** |

தன்மையிடத்திற்குரிய வினைமுற்று **தன்மை வினைமுற்று** ஆகும். அது **தன்மை ஒருமை வினைமுற்று, தன்மைப் பன்மை வினைமுற்று** என இரண்டு வகைப்படும். தன்மை ஒருமை வினை முற்று விகுதிகள் **அல், அன், என், ஏன்**. தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகள் **அம், ஆம், எம், ஏம், ஓம்.**

#### 2. முன்னிலை வினைமுற்று

| | |
|---|---|
| **உண்டனை. உண்டாய்.**<br>**உண்ணுநின்றி. சேறி.** | முன்னிலை ஒருமை வினை முற்று விகுதிகள்<br>**ஐ, ஆய், இ.** |
| **உண்டனிர். உண்டீர்.**<br>**உண்டிடீர்கள்.** | முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதிகள்<br>**இர், ஈர் + கள்** |

முன்னிலையிடத்திற்குரிய வினைமுற்று **முன்னிலை வினைமுற்று** ஆகும். அது **முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று** என இரண்டுவகைப்படும். முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் **ஐ, ஆய், இ.** முன்னிலைப்பன்மை வினை முற்று விகுதிகள் **இர், ஈர்.**

### 3. படர்க்கை வினைமுற்று

செய்தனன். செய்தான். ஆண்பால் விகுதிகள் **அன், ஆன்.**
செய்தனள். செய்தாள். பெண்பால்விகுதிகள் **அள், ஆள்.**
செய்தனர். செய்தார். பலர்பால் விகுதிகள் **அர், ஆர்.**
வந்தது. போயிற்று. ஒன்றன்பால் விகுதிகள். **து, று.**
வந்தன. செல்லா. பலவின்பால் விகுதிகள் **அ, ஆ.**

படர்க்கை யிடத்திற்குரிய வினைமுற்று **படர்க்கை வினைமுற்று** ஆகும். அது **ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று** என ஐந்து வகைப்படும்.

அவை முறையே அன்—ஆன், அள்—ஆள், அர்—ஆர், து—று, அ—ஆ என்பவைகளை விகுதிகளாகப் பெற்று வரும்.

### 4. ஏவல் வினைமுற்று

நீ உண். உண்ணுய். உண்ணுதி. ஏவல் ஒருமை
விகுதிகள் **ஆய், இ.**
நீர் உண்மின். உண்ணீர். உண்ணும். ஏவற்பன்மை
விகுதிகள் **மின், ஈர், உம்.**

ஏவற் பொருளில் வரும் வினைமுற்று **ஏவல் வினைமுற்று** ஆகும். அது **ஏவல் ஒருமை வினை முற்று, ஏவற் பன்மை வினை முற்று** என இரண்டு வகைப்படும்.

ஏவல் ஒருமை வினைமுற்று விகுதிகள் **ஆய், இ.**

ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகள் **மின், ஈர், உம். மின், உம்** விகுதிகளின் மேல் **கள்** விகுதியும் வரும். இவ்விகுதிகள் பெறுமல் வினைப்பகுதி மட்டும் **நட, படி, உண்** என நின்றும் ஏவலை உணர்த்தும். இவை விகுதி குன்றிய ஏவல் ஒருமை வினைமுற்றுக்கள் எனப்படும். ஏவல் எதிர்மறையில் **வரும்போது** பகுதியுடன் **ஆ, அல்** என்னும் எதிர்மறை இடைநிலைகளையும் **ஏல்** என்னும் விகுதியையும் பெற்று வரும். செய்**யா**தி. செய்**யன்**மின். **ஆ, அல்,** எதிர்மறை இடைநிலை. செய்**யேல்**. விரும்**பேல்**. **ஏல்** எதிர் மறை விகுதி.

### 5. வியங்கோள் வினைமுற்று

| | | |
|---|---|---|
| வாழ்க. வாழ<br>வாழி. வாழிய.<br>வாழியர். | } | அவன், அவள், அவர்; அது,<br>அவை; நான், நாம், நாங்கள்;<br>நீ, நீர், நீவிர், நீங்கள். |

இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கு முரியதாய் வாழ்த்தல் முதலான பொருள்களைத் தருவதாய் வரும் வினைமுற்று **வியங்கோள் வினைமுற்று** ஆகும். அது **வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல்** முதலான பொருள்களில் வரும். வியங்கோள் விகுதிகள் **க, அ, இ, இய, இயர்** என்பன. **அல்** என்னும் விகுதி உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வரும்.

வாழ்**க** தமிழ்மொழி - வாழி**ய** செந்தமிழ். வாழ்த்தல். அறியாமை அழி**க** - தீமை ஒழி**க**. வைதல்-சாபமிடுதல்,

அருளுக - பொறுத்தருள்க. வேண்டல்.

கற்க - நிற்க. விதித்தல்

செய்யற்க மகனெனல் அல் எதிர்மறை.

மக்கட் பதடி யெனல். அல் உடன்பாடு.

குறிப்பு: ஏவலுக்கும், முன்னிலை வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் வேறுபாடுகள் உண்டு.

| ஏவல் வினைமுற்று | முன்னிலை வினைமுற்று |
|---|---|
| 1. ஏவற்பொருளை உணர்த்தும். | 1. முன்னிலைப் பொருளின் தொழிலையுணர்த்தும். |
| 2. எதிர்காலத்தில்மட்டும் வரும். | 2. முக்காலத்திலும் வரும். |
| 3. விகுதியே எதிர்காலம் காட்டும். | 3. இடைநிலைகள் காலம் காட்டும். |

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| 1. கட்டளைப் பொருளில் மட்டும் வரும். | 1. வாழ்த்தல் முதலான பொருள்களில் வரும். |
| 2. முன்னிலையில் மட்டும் வரும். | 2. ஐம்பால் மூவிடங்களிலும் வரும். |
| 3. ஒருமை, பன்மைப் பிரிவு உண்டு. | 3. ஒருமை, பன்மைப் பிரிவு இல்லை. |
| 4. அதிகாரத்துடன் ஏவுவது. | 4. மரியாதையுடன் கட்டளையிடுவது. |

## (iii) முற்றெச்சம்

கண்டனன் வணங்கினான். (கண்டு வணங்கினான்)
முகந்தனர் கொடுத்தார். (முகந்து கொடுத்தார்)

இவற்றில் **கண்டனன், முகந்தனர்** என்ற வினை முற்றுச் சொற்கள் வினைமுற்றுப்பொருளை **உணர்த்** தாமல் **கண்டு, முகந்து** என எச்சப்பொருளை **உணர்த்தி** நின்று, வணங்கினான், கொடுத்தார் என்னும் முற்றுக் களைக் கொண்டு முடிந்தன. இவ்வாறு **வருவது** **முற்றெச்சம்** எனப்படும்.

**வினைமுற்று எச்சப்பொருளில் வருவது முற்றெச்சம் ஆகும்.**

## 3. இடைச்சொல்

### ஏகாரவிடைச் சொல்

| | |
|---|---|
| 1. மாணவருள் இவனே தலைவன். | ஏ பிரிநிலை |
| 2. நீயே செய்தாய்? | ,, வினா |
| 3. அறமே, பொருளே, இன்பமே. | ,, எண் |
| 4. ஆடுவோமே பள்ளு பாடுவோமே. | ,, ஈற்றசை |
| 5. அறிவே சிறந்தது. | ,, தேற்றம் |
| 6. ஏஏ இவள் பேடி. | ,, இசை நிறை |

ஏகாரம் **பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசை நிறை** என்னும் ஆறு பொருள்களில் **வரும்.**

### ஓகாரவிடைச் சொல்

| | |
|---|---|
| 1. வாழவோவந்தான் | ஓ ஒழியிசை |
| 2. கல்லோ? கட்டையோ? | ,, வினா |
| 3. ஓ ஓ பெரியார் | ,, உயர்வு சிறப்பு |
| 4. ஓ ஓ கொடியன் | ,, இழிவு சிறப்பு |
| 5. அவனோ செய்வான் | ,, எதிர்மறை |
| 6. ஆணோ அன்று; பெண்ணோ அன்று | ,, தெரிநிலை |
| 7. ஓ ஓ கெட்டான். | ,, கழிவுப்பொருள் |

8. காணிய வம்மினோ ,, அசைநிலை
9. இவனோ அவர்களில் தலைவன் ,, பிரிநிலை

ஓகாரம் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என்னும் எட்டுப்பொருள்களில் வரும்.

## உம்மை இடைச்சொல்

1. நான் மறக்கினும் உம் எதிர்மறை
2. வேடரும் அஞ்சும் காடு. ,, உயர்வு சிறப்பு
3. நாயும் தின்னாத உணவு. ,, இழிவு சிறப்பு
3. வந்தாலும் வருவேன். ,, ஐயம்
5. ஆசிரியரும் வந்தார். ,, எச்சம்

முன்னரே மாணவர்களும் வந்தனர் எனப் பொருள்தரின் இறந்தது தழுவிய எச்ச உம்மை ஆகும். இனி மாணவர்களும் வருவார் எனப் பொருள்தரின் எதிரது தழுவிய எச்ச உம்மை ஆகும்.

6. அனைவரும் வந்தனர். உம் முற்று
7. அறனும், பொருளும், இன்பமும். ,, அளவை
8. நாயும் அன்று; நரியும் அன்று. ,, தெரிநிலை
9. பால் உணவும் ஆயிற்று. ,, ஆக்கம்

உம்மையிடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களில் வரும்.

நன்னூல் : எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே.

### கொல் என்னுமிடைச்சொல்

1. இது நன்மைகொல். தீமைகொல். கொல் ஐயம்
2. பயனென்கொல். ,, அசைநிலை

கொல்லென்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் பொருள்களில் வரும்.

**நன்னூல்**: கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.

## 4. உரிச்சொல்

| | |
|---|---|
| சாலப்பெரிது. | களி கூர்மனம். |
| உறுபுகழ். | கழிபேருவகை. |
| தவப்பிஞ்சு. | சாலப்பேசினுன். |
| நனிபேதை. | நனிதின்ருன். |

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் உரிச்சொற்கள் **மிகுதி** என்னும் ஒரு குணத்தை உணர்த்திவரும் உரிச்சொற்கள் ஆகும். இவை ஒரு குணம் குறித்த பல உரிச்சொற்கள் எனப்படும். இவை பெயரைச் சாந்துவரின் **பெயருரிச்சொல்** எனப்படும்; வினையைச் சார்ந்துவரின் **வினையுரிச்சொல்** எனப்படும்.

**நன்னூல்**: சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

# III. பொது

## வழக்கு

சொற்கள் வழங்கும்முறை **வழக்கு** எனப்படும். அது இயல்புவழக்கு, **தகுதிவழக்கு** என இரண்டு வகைப்படும்.

### இயல்பு வழக்கு

1. நிலம், நீர், சோறு. சோறு உண்டான். நீர் அருந்தினன். இவை இலக்கண முறைப்படி அமைந்து வழங்குகின்றன. இவ்வாறு வழங்குவது **இலக்கண முடையது** எனப்படும்.

**சொற்கள் இலக்கண முறைப்படி அமைந்து வழங்குவது இலக்கணமுடையது ஆகும்.**

2. இலக்கணமுடையது — இலக்கணப்போலி

| | | |
|---|---|---|
| இல்முன் | முன்றில் | சொற்கள் முன் பின்னாக மாறி வழங்குகின்றன. |
| இல்வாய் | வாயில் | |
| நகர்ப்புறம் | புறநகர் | |
| சதை | தசை | எழுத்துக்கள்முன் பின்னாக மாறி வழங்குகின்றன. |
| விசிறி | சிவிறி | |

இவ்வாறு மாறி வழங்குவது **இலக்கணப்போலி** எனப்படும்.

**இலக்கணமுறைப்படி அமையவேண்டிய சொற்களும் எழுத்துக்களும் முன்பின்னாக மாறி அமைந்துவரினும் இலக்கணமுடையது போலவே வழங்கப்பட்டு வருவது இலக்கணப்போலி ஆகும்.**

3. இலக்கணமுடையது மரூஉ

| | | |
|---|---|---|
| சோழநாடு | சோணாடு | எழுத்து குறைந்தும், திரிந்தும், சேர்ந்தும் இலக்கணம் சிதைந்து மருவி வழங்குகின்றன. |
| தஞ்சாவூர் | தஞ்சை | |
| கோயமுத்தூர் | கோவை | |
| அருமருந்தன்னபிள்ளை | அருமந்த பிள்ளை | |
| மலையமாநாடு | மலாடு | |

இவ்வாறு மருவி வழங்குவது மரூஉ எனப்படும்.

**இலக்கணமுடைய சொற்கள் இலக்கணஞ் சிதைந்து திரிந்து மருவி வழங்கிவருவது மரூஉ ஆகும்.**

ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அதை வழங்குவது இயல்பு வழக்கு எனப்படும். அது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்று வகைப்படும்.

**தகுதி வழக்கு**

**இடக்கர்** — **இடக்கரடக்கல்**

1. குழந்தை மலம் கழித்தது. — குழந்தை வெளிக்கு இருந்தது.

மலங்கழுவி விடு. — கால் கழுவி விடு.

இவற்றில் சொல்லத்தகாத—இடக்கரான சொற்களை மறைத்து வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு மறைத்து வழங்குவது இடக்கரடக்கல் எனப்படும்.

**சொல்லத்தகாத இடக்கரான சொற்களை மறைத்து வேறு தகுதியான சொற்களைக்கொண்டு வழங்குவது இடக்காடக்கல் ஆகும்.**

| **மங்கலமின்மை** | **மங்கலம்** |
|---|---|
| 2. தாலி அறுந்தது | தாலி பெருகிற்று |
| விளக்கு அணைந்தது | விளக்கு பெரிதாயிற்று |
| சுடுகாடு | நன்காடு |
| செத்தார் | துஞ்சினர் |
| நான் போகிறேன் | நான் போய் வருகிறேன். |

இவற்றில் மங்கலமல்லாத சொற்களை ஒழித்து மங்கலமான சொற்களால் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்குவது மங்கலம் எனப்படும்.

**மங்கலமல்லாத சொற்களுக்குப்பதில் மங்கலமான சொற்களை வழங்குவது மங்கலம் ஆகும்.**

| 3. வெளிப்படைச்சொல் | குழூஉக்குறிச்சொல் |
|---|---|
| பொன் | பறி தட்டார் கூறுவது. |
| கள் | சொல்விளம்பி வேடர் கூறுவது. |
| சாராயம் | கருப்பு குடியர் கூறுவர். |
| ஒன்று, இரண்டு. | கேவு, இராயம். } வணிகர் கூறுவது. |
| ஒரு ரூபாய். | மதி வெள்ளை. } வணிகர் கூறுவது. |

வெளிப்படையான சொற்களுக்குப் பதிலாக ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கு மட்டும் விளங்கக் கூடிய குறிப்புச்சொற்களை வழங்குதல் குழூஉக்குறி எனப்படும்.

**ஒரு குழூவினர் தங்கட்குமட்டும் தெரியும்படியான குறிப்புச்சொற்களை வழங்குவது குழூஉக்குறி ஆகும்.**

குழூஉ-கூட்டம் குறி-குறிப்பானசொல்.

ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை ஏதேனும் காரணம்பற்றி விலக்கித் தகுதியான வேறு சொல்லால் அப்பொருளைக் கூறுவது தகுதி வழக்கு ஆகும். அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

எனவே இயல்பு வழக்கு மூன்று வகையும், தகுதி வழக்கு மூன்றுவகையும் ஆகவழக்கு ஆறு வகைப்படும்,

நன்னூல் : இலக்கண முடையது இலக்கணப்போலி
மரூஉ என்றாகும் மூவகை இயல்பும்
இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனும் முத்தகுதியோடு ஆறும் வழக்கியல்.

# IV. புணர்ச்சி

## 1. மூவகை விகாரங்கள்

1. வாழை + பழம் = வாழைப்பழம். ப் தோன்றியது.
புளி + பழம் = புளியம் பழம். அம் சாரியை ,,

**நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் எழுத்தாவது, சாரியையாவது தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகும்.**

2. பல் + பொடி = பற்பொடி ல் - ற் ஆகத் திரிந்தது.
முள் + செடி = முட்செடி ள் - ட் ஆகத் திரிந்தது.
பொன் + குடம் = பொற்குடம் ன்-ற் ஆகத் திரிந்தது.
மண் + பாண்டம் = மட்பாண்டம் ண்-ட் ஆகத்திரிந்தது
எள் + நெய் = எண்ணெய். ள், ந்-ண் ஆகத் திரிந்தன,

அல் + திணை = அஃறிணை. ல்-ஃ ஆகவும்,
த்-ற் ஆகவும் திரிந்தன.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள எழுத்துக்கள் திரிந்து வருவது திரிதல் விகாரம் ஆகும்.

3. மரம் + வேர் = மரவேர். ம் கெட்டது.
பெருமை + நாள் = பெருநாள். மை விகுதி கெட்டது.
பல + பொருள் = பல்பொருள். அ கெட்டது.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது நிலைமொழியீற்றில் உள்ள எழுத்தாவது விகுதியாவது கெட்டுவருவது கெடுதல் விகாரம் ஆகும்.

தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரம் மூன்று வகைப்படும்.

நன்னூல் : தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூவிடத்தும் ஆகும்.

## 2. குற்றுகரப் புணர்ச்சி வகை

1. நாடு + ஆண்டான் = நாடாண்டான். உயிர்வர உகரம் கெட்டது.

நாடு + யாது ? = நாடியாது ? யகரம்வர இகரமாயிற்று.

குற்றுகரத்தின்முன் உயிர்வர உகரம் கெடும் ; யகரம்வர இகரமாகத்திரியும்.

2. பத்து + பாட்டு = பத்துப்பாட்டு.
எட்டு + தொகை = எட்டுத்தொகை.
முத்து + பல் = முத்துப்பல்.
} அல்வழியில் வன்றொடரின் முன் வலி மிகுந்தது.

| | |
|---|---|
| பாக்கு + பெட்டி = பாக்குப்பெட்டி.<br>மச்சு + படி = மச்சுப்படி.<br>பட்டு + புடவை = பட்டுப்புடவை. | வேற்றுமையில் வன்றொடரின் முன் வலி மிகுந்தது. |

**வன்றொடர்க் குற்றுகரத்தின் முன் வரும் வல்லினம் அல்வழி, வேற்றுமை இரண்டிலும் மிகுந்து வரும்.**

| | |
|---|---|
| 3. சங்கு + பெரிது = சங்குபெரிது.<br>மஞ்சு + கரிது = மஞ்சுகரிது.<br>பந்து + சிறிது = பந்துசிறிது.<br>மென்று + தின்றான் = மென்று தின்றான். | அல்வழியில் மென்றொடரின் முன் வலி இயல்பாயிற்று. |
| வண்டு + கால் = வண்டுக்கால்.<br>பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி.<br>அம்பு + தூணி = அம்புத்தூணி. | வேற்றுமையில் மென்றொடரின் முன் வலி மிகுந்தது. |

**மென்றொடர்க் குற்றுகரத்தின்முன் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்; வேற்றுமையில் மிகுந்து வரும்.**

| | |
|---|---|
| இபுரும் + பாதை = இருப்புப்பாதை.<br>நஞ்சு + பொய்கை = நச்சுப்பொய்கை.<br>மருந்து + பை = மருத்துப்பை. | மென்றொடர் வன்றொடராகி வலி மிகுந்தது. |

**சில மென்றொடர்க் குற்றுகரங்கள் வன்றொடராகி நிற்க அவற்றின் முன்வரும் வல்லினம் மிகுந்து வரும்.**

| | |
|---|---|
| 4. மாடு + பாய்ந்தது = மாடுபாய்ந்தது.<br>எஃகு + கடிது = எஃகுகடிது.<br>வரகு + சிறிது = வரகுசிறிது.<br>மார்பு + பெரிது = மார்புபெரிது. | அல்வழியில் சில குற்றுகரங்களின் முன் வலி இயல்பாயிற்று. |

ஆடு + கால் = ஆட்டுக்கால்.
வயிறு + கடுப்பு = வயிற்றுக்கடுப்பு. } வேற்றுமையில் ட, ற இரட்டித்து வலி மிகுந்தது.

நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர்க் குற்றுகரங்களின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும். வேற்றுமையில் நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகரங்களில் உள்ள டகர றகர மெய்கள் இரட்டித்து நிற்க வரும் வல்லினம் மிகும்.

## 3 பண்புத் தொகைப் புணர்ச்சி

மை விகுதி பெற்ற பண்புப் பெயர்கள் பிற சொற்களோடும், வேறு விகுதிகளோடும் புணரும் போது மை விகுதி தொக்கி நின்று, பலவகையான மாறுதல்களுடன் புணர்வது **பண்புத் தொகைப் புணர்ச்சி** எனப்படும்.

பண்புப் பெயர்கள் பிறசொற்களோடு புணரும் போது மை விகுதி கெடுதல், இடையில் எழுத்துத் திரிதல், ஒற்று இரட்டல், இனமிகல் முதலான மாறுதல்களைப் பெற்று வரும். சிலவிடங்களில் பகுதியின் முதலும் திரிந்து வரும்.

1. வெண்மை + பட்டு = வெண்பட்டு.
   செம்மை + பொருள் = செம்பொருள் } ஈற்றில் மை விகுதி கெட்டது.

2. கருமை + அன் = கரியன்.
   சிறுமை + அது = சிறியது. } மை விகுதிகெட்டு, இடை உகரம் இகரம் ஆயிற்று.

3. முதுமை + ஊர் = மூதூர். } மை விகுதி கெட்டு,
பெருமை + ஊர் = பேரூர். } முதல் நீண்டு வந்தது.

3. பசுமை + புல் = பைம்புல். } ஈறும் இடையும் கெட்டு,
பசுமை + தார் = பைந்தார் } முதலில் அ, ஐ ஆனது.

5. வெறுமை + இலை = வெற்றிலை. } ஈறு கெட்டு, இடையில்
சிறுமை + ஊர் = சிற்றூர் } ஒற்று இரட்டிற்று.

6. செம்மை + ஆம்பல் = சேதாம்பல். } ஈறு கெட்டு, முதல் நீண்டு, முன்நின்ற மெய் ம் த் ஆகத்திரிந்தது.

7. கொடுமை + கோல் = கொடுங்கோல். } ஈறு கெட்டு, இனம் மிகுந்தது.

**பண்புத் தொகைப் புணர்ச்சியில் பொதுவாக ஈற்றில் உள்ள விகுதி கெடும்; இடையில் உள்ள உகரம் இகரமாகத் திரியும்; முதலில் நின்ற குறில் நெடிலாகவும், அகரம் ஐகார மாகவும் திரியும்; இடையில் ஒற்று இரட்டிக்கும்; நின்ற மெய் திரியும்; வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்தும் வரும்.**

**குறிப்பு:** இவ்விதிகள் மை விகுதி பெற்ற பண்புப் பெயர் களுக்குத்தாம் பொருந்தும். அன்பு, அழகு முதலான பண்புப் பெயர்கள் பொது விதிப்படியே புணரும்.

**நன்னூல்:** ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற்கியல்பே.

# V. யாப்பு

## 1. வெண்பாவின் பொது இலக்கணம்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் வெண்பா)

3. நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (நேரிசை வெண்பா)

இவ் வெண்பாக்கள் இயற்சீர் வெண்சீர் என்ற இருவகைச் சீர்களையும், இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை என்ற இருவகைத் தளைகளையும் பெற்று, ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றவை நாற்சீர் அடிகளாகவும் வந்தன.

**இயற்சீர் வெண்சீர்களையும், இயற்சீர்வெண்டளை வெண்சீர் வெண்டளைகளையும் பெற்று, மற்றைய அடிகள் நாற்சீர் அடிகளாகவும் ஈற்றடி முச்சீரடியாகவும் வந்து, அதன் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று முடிவது வெண்பா ஆகும்.**

வெண்பா இரண்டடி முதல் பலவடிகளில் வரும். அவை வெவ்வேறு பெயர்களைப் பெறும்.

## 2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

பூத்த வேஃங்கை வியன்சினை ஏறி
மயிலின் மகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.

இதில் மாச்சீர் விளச்சீர் என்ற இயற்சீர்களும், அவற்ருலாகிய ஆசிரியத் தளைகளும் இயற்சீர் வெண்டளையும் வந்துள்ளன. ஈற்றயலடி முச்சீரடியாகவும் மற்றைய அடிகள் நாற்சீரடிகளாகவும் வந்து ஏ என்று முடிந்தது.

**மாச்சீர் விளச்சீர்களையும், ஆசிரியத்தளை இயற்சீர் வெண்டளைகளையும் பெற்று, ஈற்றயலடி முச்சீர் அடியாகவும் ஏனைய அடிகள் நாற்சீர் அடிகளாகவும் வந்து, ஈற்றடியின் இறுதிச்சீர் ஏ, ஓ என முடிவது ஆசிரியப்பா ஆகும்.**

மாமுன் நேர்வருவது நேரொன்ருசிரியத்தளை.
விளமுன் நிரைவருவது நிரையொன்ருசிரியத்தளை.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை. காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.

ஆசிரியப்பா மூன்றடிமுதல் பலவடிகளில் வரும்.

# VI. அணி

## 1. சிலேடை அணி

**வைக்கோலுக்கும் - யானைக்கும் சிலேடை.**

வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும் — சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

களம் - நெற்களம், போர்க்களம்.
கோட்டை - கட்டுகள், அரசரது கோட்டை.
போர் - வைக்கோல் போர். அமர்.

இதில் களம், கோட்டை, போர் என்ற சொற்கள் பிரியாமல் நின்று இருபொருள்களைத் தந்து நின்றன. இவ்வாறு வருவது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

**பாவலர்க்கும்—வண்டுகளுக்கும் சிலேடை.**

1. " ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே "

2. " நாவலர்தம் புத்திரரும் கண்ணும் பிரமரமும்
காவியங்கள் ஆயும் கலைசையே "

1. காவலரை - அரசர்களை.
கா + அலரை = சோலையில் உள்ள மலர்களை.

2. காவியங்கள் - காப்பியங்கள்.

காவி + அம் + கள் = நீலோற்பல மலரில்உள்ள அழகிய தேன்.

இவற்றில் **காவலர், காவியங்கள்** என்ற சொற்கள் ஒன்ருய் நின்று ஒரு பொருளேயும், பிரிந்து நின்று பல பொருள்களேயும் தந்து நின்றன. இவ்வாறு சொற்கள் பிரிந்து நின்று பொருள் தருவது **பிரிமொழிச் சிலேடை** எனப்படும்.

**ஒரு சொல்லில் அல்லது தொடரில் பல பொருள்கள் விளங்க அமைத்துக் கூறுதல் சிலேடை அணியாகும்.**

அது **செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை** என இரண்டு வகைப்படும்.

சிலேடை — பல பொருள் தருவது.

ஒருவகைச் சொற்ருெடர் பல பொருட் பெற்றி
தெரிதர வருவது சிலேடை ஆகும்.
அதுவே, செம்மொழி பிரிமொழி எனவிரு திறப்படும்.

(தண்டியலங்காரம்)

## 2. மடக்கு அணி

1. "அரங்கும் ஐயற்கு வெள்ளி யரங்கமே
ஆலயம் பிற வெள்ளியரங்கமே
உரங்கொள் பல்கலன் என்பரவாமையே
உணர்வுருமையும் என்பரவாமையே"

வெள்ளி அரங்கம் - மதுரையில் உள்ள வெள்ளி யம்பலம். பிற எள்ளியர் அங்கம் - மற்றவற்றை வெறுத்த துறவிகளின் மனம். கலன் என்பு அரவு ஆமை — அணிகலன் எலும்பு, பாம்பு, ஆமைஓடு. என்பரவாமை - என்வழிபாடு இல்லாமை - நான் துதியாமை.

இதில் ஒரு அடியில் முன்வந்த தொடர்களே மீண்டும் மடங்கிவந்து, வேறு பொருள் தந்து நின்றன. இவ்வாறு வருவது மடக்கு எனப்படும். இவை பிற சொற்கள் இடையிட்டு வந்த மடக்கு.

2. கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.

வல்லி அம் தாமரை-கொடியோடு கூடிய அழகிய தாமரைகளையுடைய, வனங்கள் ஆயின-நீர்த்தடங்கள் ஆனவை யெல்லாம், வல்லியம்-புலிகளையும், தாமரை - தாவியோடுகின்ற மான்களையும் உடைய, வனங்கள் ஆயின - காடுகளாகிவிட்டன.

இதில் ஒரு அடி முழுதும் மடங்கிவந்து, வேறு பொருள் தந்து நின்றது. இது இடைபிறிதின்றி வந்த மடக்கு. இது கடையீரடி மடக்கு ஆகும்.

ஒரு செய்யுளில் முன்வந்த தொடரேனும் அடியேனும் பின்னரும் மடங்கி வந்து, வேறு வேறு பொருள் தருவது மடக்கு என்னும் சொல்லணி ஆகும். இது யமகம் எனவும் பெயர் பெறும்'

எழுத்தின் கூட்டம் இடை பிறி தின்றியும்
பெயர்த்தும் வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே.

அதுதான், ஓரடி முதலா நான்கடிகாறும்
சேருமென்ப தெளிந்திசினோரே. (தண்டியலங்காரம்)

# மொழிப் பயிற்சி

## I. வாக்கிய வகைகள்

தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலவைவாக்கியம் ஆகியவைகள் முன்படிவத்தில் விளக்கப்பட்டன.

செய்திவாக்கியம், கட்டளைவாக்கியம், வினாவாக்கியம், உணர்ச்சிவாக்கியம் என வாக்கியங்கள் நான்கு வகைப்படும்.

1. **செய்திவாக்கியம்**: திருக்குறளை உலகம் புகழ்கிறது.

பள்ளிகளில் திருக்குறளைப் பாடமாக வைத்துள்ளார்கள்.

திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுகின்றனர்கள்.

இவ்வாக்கியங்கள் செய்திகளைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு வருவது செய்திவாக்கியம் எனப்படும்.

2. **கட்டளைவாக்கியம்**: மகனே! பள்ளிக்குச் செல். கல்வியைக் கல். கற்றவழி நில்.

இவ்வாக்கியங்கள் கட்டளையிடுவதைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு வருவது கட்டளைவாக்கியம் எனப்படும்.

3. **வினாவாக்கியம்**: இலக்கணம் படித்தாயா?

இவ்வாக்கியம் வினாப்பொருளை உணர்த்துகின்றது. இவ்வாறு வருவது வினாவாக்கியம் எனப்படும்.

4. **உணர்ச்சிவாக்கியம்**: மக்கள் வறுமையால் வாடுகின்றனரே! தொழில் இன்றி உழல்கின்றனரே!

இவ்வாக்கியங்கள் உணர்ச்சியைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு வருவது உணர்ச்சிவாக்கியம் எனப்படும்.

## 11. வாக்கிய மாற்றம்

ஒருவகை வாக்கியத்தை மற்றொருவகை வாக்கியமாக மாற்றுவது வாக்கிய மாற்றம் எனப்படும்.

1. செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாகவும், செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாகவும் மாற்றலாம்.

2. உடன்பாட்டை எதிர்மறையாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும் மாற்றலாம்.

3. நேர்க்கூற்றை அயற்கூற்றாகவும், அயற்கூற்றை நேர்க்கூற்றாகவும் மாற்றலாம்.

**செய்வினை வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியம்**

கருமான் கத்தியைச் செய்தான் — கத்தி கருமானால் செய்யப்பட்டது.

வேலன் நாயை அடித்தான்-நாய் வேலனால் அடிபட்டது.

**செயப்பாட்டுவினை வாக்கியம் செய்வினை வாக்கியம்**

| | |
|---|---|
| கோவலன் பாண்டியனால் கொலையுண்டான். | பாண்டியன் கோவலனைக் கொன்றான். |
| தமிழ்நாடு மூவேந்தரால் ஆளப்பட்டது. | மூவேந்தர் தமிழ்நாட்டை ஆண்டனர். |

குறிப்பு: செய்வினை வாக்கியத்தில் கருத்தா முதல் வேற்றுமையாகவும், செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாகவும் வரும். செயப்பாட்டு வினை வாக்கியத்தில் கருத்தா மூன்றும் வேற்றுமையாகவும், செயப்படுபொருள் முதல் வேற்றுமையாகவும் வரும். செய்வினைப் பகுதியுடன் படு உண் விகுதிகளில் ஒன்றுசேர்ந்து செயப்படு பொருளுக்குரிய செயப்பாட்டு வினையில் முடியும்.

| உடன்பாட்டுவினை | எதிர்மறைவினை |
|---|---|
| வேலன் படித்தான். | வேலன் படித்திலன் – இல் |
| முருகன் எழுதுகின்றான். | முருகன் எழுதுகின்றிலன் – [இல் |
| கந்தன் உண்பான். | கந்தன் உண்ணான் – ஆ |
| அது உண்ணும். } | அது உண்ணாது. } – ஆ |
| அவை உண்ணும். } | அவை உண்ணா. } |

குறிப்பு: உடன்பாட்டுவினை எதிர்மறைவினை ஆகும்போது **இல், ஆ** என்னும் எதிர்மறை இடைநிலைகளில் ஒன்றை விகுதிக்கு முன் பெற்றுவரும்.

வேலன் "**நான் விளையாட வருகிறேன்**" என்றான்.

"**நான் விளையாட வருகிறேன்**" என்று வேலன் கூறினான்.

இவ்வாறு ஒருவன் நேரில் கூறியதை அவன் கூறியவாறே தன்மையிடத்து வாக்கியமாக வைத்துக் கூறுவது **நேர்க்கூற்றுவாக்கியம்** எனப்படும்.

வேலன் தான் விளையாட வருவதாகச் சொன்னான்.

தான் விளையாட வருவதாக வேலன் சொன்னான்.

இவ்வாறு ஒருவன் கூறியதன் பொருளை மாற்றாது சொல்லை மாற்றிப் படர்க்கையிடத்து வாக்கியமாகக் கூறுவது **அயற்கூற்றுவாக்கியம்** எனப்படும்.

குறிப்பு: கூறுவான் பெயரை முன்வைத்து நேர்க்கூற்று வாக்கியம் தொடங்கினால், இறுதியில் என்றான் அல்லது என்று சொன்னான் என முடிக்கவேண்டும். நேர்க்கூற்றையே வாக்கியத்தின் முதலில் கூறித் தொடங்கினால், என்று அவன் கூறினான் என முடிக்கவேண்டும். நேர்க்கூற்றை மேற்கோள் குறிகளுக்குள் எழுதவேண்டும். நேர்க்கூற்று அயற்கூற்றாக வரும்போது படர்க்கையாகச் சொல்வதால் மேற்கோள் குறிகள் வேண்டா.

| நேர்க்கூற்றுவாக்கியம் | அயற்கூற்றுவாக்கியம் |
|---|---|
| 1. முருகன் "நான் வருவேன்" என்றான்.(என்று சொன்னான்) | 1. முருகன் தான் வருவதாகக் கூறினான். |
| 2. "நான் வருவேன்" என்று முருகன் கூறினான். | 2. தான் வருவதாக முருகன் கூறினான். |

## III. வாக்கியப் பிழைகளும், திருத்தமும்.

வாக்கியங்கள் பிழைபட அமைவது வாக்கியப்பிழை ஆகும். பிழையின்றித் திருத்தமாக எழுதவேண்டும்.

| வாக்கியப் பிழை | திருத்தம் |
|---|---|
| இறைவன் எங்கும் இருக்கிறார். | இறைவன் எங்கும் இருக்கிறான். |
| ஓடினவன் கந்தன் அல்ல. | ஓடினவன் கந்தன் அல்லன். |
| பாடினவள் பொன்னி அன்று. | பாடினவள் பொன்னி அல்லள். |
| அதுவல்ல. இவையன்று. | அதுவன்று, இவையல்ல. |
| வந்தவர்கள் இவர்களல்ல. | வந்தவர்கள் இவர்களல்லர். |
| பல அறிஞர்கள் பேசுவார்கள். | அறிஞர்கள் பலர் பேசுவார்கள். |
| அவர்கள்தான் செய்தார்கள். | அவர்கள்தாம் செய்தார்கள். |
| என் புத்தகம் உள. | என் புத்தகம் உளது. |
| ஆட்டைக் காலை ஒடித்தான். | ஆட்டின் காலை ஒடித்தான். |
| யானை பெரியவையாயிருக்கும் | யானை பெரியதாயிருக்கும். |
| வேலன் பாலன் போனான். | வேலனும் பாலனும் போனார்கள் |
| நாய்கள் சண்டையிட்டது. | நாய்கள் சண்டையிட்டன. |
| அவனை எனக்குத் தெரியும். | அவனைப்பற்றி எனக்குத் தெரியும். |
| அவ்வூரில் ஆசிரியர் கிடையாது. | அவ்வூரில் ஆசிரியர் இல்லை. |
| ஒவ்வொரு மனிதர்க்கும். | ஒவ்வொரு மனிதற்கும். |
| நாகனும் தம்பியும் வந்தான். | நாகனும் தம்பியும்வந்தார்கள். |
| வானமெல்லாம்நீலமாய்உள்ளன. | வானமுழுதும் நீலமாய் உள்ளது |
| எனது நண்பனது புத்தகம். | என் நண்பனது புத்தகம். |

## IV. வழூஉச் சொற்களும் திருத்தமும்

சில சொற்கள் வழுவாக வழங்குகின்றன. அவை வழூஉச் சொற்கள் எனப்படும். அவற்றினை அறிந்து திருத்தமாக வழங்கவேண்டும்.

| வழூஉச் சொற்கள் | திருத்தம் | வழூஉச் சொற்கள் | திருத்தம் |
|---|---|---|---|
| அதுகள் | அவை | மம்முட்டி | மண்வெட்டி |
| இதுகள் | இவை | மனசு | மனம் |
| ஆத்துக்குவா | அகத்திற்குவா | மணத்தக்காளி | மணித்தக்காளி |
| ஆத்தில் குளி | ஆற்றில் குளி | முந்தாணி | முன்றானை |
| அத்திம்பேர் | அத்தையன்பர் | மொள்ள | மெல்ல |
| அம்மாஞ்சி | அம்மான்சேய் | வயறு | வயிறு |
| இருக்குது | இருக்கிறது | வலதுகை | வலக்கை |
| இரெட்டை | இரட்டை | இடதுகை | இடக்கை |
| இரெண்டவம் | இரண்டகம் | வெக்கம் | வெட்கம் |
| உத்திரவு | உத்தரவு | வெங்கலம் | வெண்கலம் |
| உம்பது | உண்பது | வெய்யல் | வெய்யில் |
| ஊராலி | ஊராளி | வெரக்கடை | விறற்கடை |
| ஊத்துநீர் | ஊற்றுநீர் | வென்னீர் | வெந்நீர் |
| எண்ணை | எண்ணெய் | வெண்ணை | வெண்ணெய் |
| ஏத்தமரம் | ஏற்றமரம் | வேக்குரு | வேர்க்குரு |
| ஒண்டியாய் | ஒன்றியாய் | வேணும் | வேண்டும் |
| ஒருவள் | ஒருத்தி | வேண்டாம் | வேண்டா |
| ஒணுங்கொடி | ஊணுங்கொடி | வைக்கல் | வைக்கோல் |
| கண்ட்ராவி | கண்ணராவி | கார்த்தல் | காத்தல் |
| சாயங்காலம் | சாயுங்காலம் | பொசாய | பொழுதுசாய |
| சேதி | செய்தி | பாவக்காய் | பாகற்காய் |
| தலக்காணி | தலைக்கணை | | |

## V. சொற்பொருத்தம்

சில வினைச் சொற்களும் ஒலிக் குறிப்புக்களும் அவ்வவற்றிற்கு எழுவாயாகவும், செயப்படுபொருளாகவும் வரும்சொற்களுக்குத் தகுந்தவண்ணம் பொருத்தமாக அமைந்து வருதல் சொற்பொருத்தம் எனப்படும்.

அவன் உணவு உண்டான். நாய் குரைக்கிறது.
யானை தீனி தின்றது. கோழி கூவுகிறது.
பாம்பு தவளையை விழுங்கியது. காகம் கரைகிறது.
நான் நீர் பருகினேன். மயில் அகவுகிறது.
மாடு தண்ணீர் குடித்தது. குதிரை கனைக்கிறது.

இவ்வாறு சொற்கள் பொருத்தமாக அமைய வேண்டும்.

## VI. சொற்றொடர் மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல்

### சொற்றொடர்களை அமைத்தல்

1. முயற்சியுடையவர்கள் அல்லும் பகலும் தம் காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள்.
2. ஒருவனுடைய நல்ல பழக்க வழக்கம் அவனுக்குப் பேரும் புகழும் உண்டாக்கும்.
3. அவரவர் செயல்களால் நல்லார் பொல்லார் என்ற சொல்லும் ஆக்கமும் கேடும் உண்டாகும்.

### மரபுத்தொடர்களை அமைத்தல்

1. அமிழ்தினு மினிய தமிழ்ச் சுவை யுணர்ந்தால் அன்பும் இன்பமும் அகத்தினில் ததும்பும்.
2. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் அருஞ்சொற் கலை பயில் அறிஞரின் இயல்பு.
3. தனக்கென வாழாத் தகைமை யாளன் மன மொழி மெய்களால் மற்றவர்க் குழைப்பான்.
4. மாணவர்கள் ஆண்டில் இளையராய் அறிவில் முதியராய் விளங்கவேண்டும்.
5. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் கள்ள நெஞ்சுடைய கயவர்தம் செயலாம்.

இவ்வாறு சொற்றொடர் மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் வேண்டும்.

## VII. உவமைகளையும், பழமொழிகளையும் வாக்கியத்தில் அமைத்தல்

### உவமைகளை அமைத்தல்

1. உழைப்பு உயர்வளிக்குமென்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல உணரலாம்.
2. ஆசிரியர் விரிவுரையில் விளம்பிய சொற்களும் விளக்கிய பொருள்களும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல இருந்தன.
3. கல்வியறிவுடன் சொல் வன்மையு மிருந்தால் பொன் மலர் மணம் பெற்றதுபோல் பெருமைதரும்.

4. திருக்குறளைத் தெளிவுறக் கற்ருல் சூரியனைக் கண்ட பனிபோல் அறியாமை அகலும்.

5. தாயை இழந்த சேய்களைப்போலக் காந்தியார் இறக்கக் கலங்கினர் உலகோர்.

இவ்வாறு உவமைகளை வாக்கியத்தில் அமைத்து எழுதவேண்டும்.

## பழமொழிகளை அமைத்தல்

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் பழமொழியை மனத்தில் வைத்து உடல் நலத்தைக் காப்பாற்ற வேண்டும்.

2. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்னும் பழமொழிப்படி இளமைப் பழக்கம் இறக்கும்வரை விடாது. ஆதலால், இளமையில் தீய பழக்கங்களை நீக்கி நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

3. சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்றபடி உலக வாழ்விற்கு ஒவ்வொருவருடைய உதவியும் வேண்டியதே யாகும்.

4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதால், இளமையில் எல்லாத் தொழில்களையும், கலைகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

5. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதற்கிணங்க நாம் அனைவரும் நாடு, மொழி, நற்கலைகள் இவற்றின் முன்னேற்றத்திற்கு உழைத்து முன்னேறவேண்டும்.

இவ்வாறு பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுத வேண்டும்.

அடியில் வரும் **சொற்றொடர்கள், மரபுத்தொடர்கள், உவமைகள், பழமொழிகள்** இவற்றை அமைத்து வாக்கியங்களை எழுது.

அடியும் முடிவும். ஆதியோடந்தம். இன்ப துன்பம்-சுக துக்கம். ஆடல் பாடல். நோவும் நொடியும். பசியும் பிணியும். மனமும் குணமும். அகமே புறம். கண்ணீரும் கம்பலையும். வாழையடி வாழையாய். அல்லோல கல்லோலமாய். காலத்திற்கேற்ற கோலம். மலைமேலிட்ட விளக்கைப்போல. இலவு காத்த கிளி போல திருடனைத் தேள் கொட்டியது போல. பாம்புக்குப் பால் வார்த்தது போல. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல. வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தது போல. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உப்பிட்டவரை உள்ளளவும் நினை. பட்டகாலே படும்; கெட்ட குடியே கெடும். துள்ளுகிறமாடு பொதி சுமக்கும். கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது.

## VIII. நிறுத்தக் குறிகள்

காற்புள்ளி ( , ) அரைப்புள்ளி ( ; ) முக்காற்புள்ளி ( : ) முற்றுப்புள்ளி ( . ) இவை நிறுத்தக் குறிகளாகும். இவற்றைப் பற்றி நான்காம் படிவத்தில் சுருக்கமாக அறிந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் விரிவாக இங்கு அறிந்துகொள்ள வேண்டும்.

**காற் புள்ளி:** ( , )

1. வள்ளி பள்ளிக்குச் சென்று, பாடம் எடுத்துப் படித்தாள்.
2. மகனை யிழந்த தாய் அழுது, அரற்றி, விம்மி, விழுந்தாள்.
3. நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், வாழ்வும் தாழ்வும் எல்லார்க்கும் பொது வானது.
4. திருவள்ளுவர் பேரறிஞர். ஆதலால், அவர் அருளிய திருக்குறளைப் படிக்கவேண்டும்.
5. கந்தன், இங்கு வந்தான். பொன்னு, போ.
6. 16, தெற்குத்தெரு, முருகநாதபுரம், கரூர்.
7. ஆசிரியர், "இலக்கணத்தை நன்கு பயில வேண்டும்" என்றார்.
8. நிலம், நீர், தீ, வளி, வான் எனப் பூதங்கள் ஐந்து.

ஒரு வாக்கியத்தில் இடையில் வரும் எச்சங்களின் பின்னும், இடையில் வரும் இணைமொழிகளின் இடையிலும், ஆதலால், ஆகையால், எனவே, ஆகவே, ஆயினும், எனினும் என்ற இணைப்புச் சொற்களுக்குப் பின்னும், முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமைக் குப் பின்னும், முகவரியில் கதவிலக்கம், தெருப் பெயர் முதலியவற்றிற்குப் பின்னும், மேற்கோள் குறிகளுக்கு முன்னும், எண்ணுப் பொருள்களின் இடையிலும் **காற் புள்ளி** அமைக்க வேண்டும்.

காற் புள்ளி வந்துள்ள இடங்களில் புணர்ச்சி விகாரங்கள் ஏற்படா; புணர்ச்சி விகாரங்கள் ஏற்படின் காற் புள்ளி இராது.

**அரைப் புள்ளி : ( ; )**

1. வேலன் கடைக்குச் சென்றான்; புத்தகம் வாங்கினான்; வீட்டிற்கு வந்தான்.
2. அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி பகவன் முதற்றே உலகு.
3. நல்லோர்களை உலகம் என்றும் விரும்பும்; தீயோர்களை உலகம் என்றும் வெறுக்கும்.
4. சிற்றுணர்வோர் சிலு சிலுப்பர்;
   முற்றுணர்வோர் மொழியார்.

தொடர் வாக்கியத்தில் இடையில் முடியும் பயனிலைகளுக்குப் பின்னும், எடுத்துக்காட்டுவமை வாக்கியங்களுக்கிடையிலும், மாறுபட்ட கருத்துடைய இரு வாக்கியங்கள் சேர்ந்த தொடர் வாக்கியங்களுக்கிடையிலும், ஒப்பு நோக்காய் வரும் வாக்கியங்களின் இடையிலும் அரைப்புள்ளி அமைக்க வேண்டும்.

**முக்காற்புள்ளி : ( : )**

1. ஒளவையார் கூறுகிறார்: "நன்றி மறவேல்" என்று.
2. உறுதிப் பொருள் நான்கு: அறம், பொருள், இன்பம், வீடு என்பன.
3. அடியிற்கண்ட நூல்களை அனுப்புக:
   திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை.

மேற்கோளின் முன் இன்ன ஆசிரியர் கூறுகிறார் எனக் குறிப்பிடும்போதும், தொகைவகைகளை விளக்கிக் கூறும்போதும், அடியிற் குறிப்பிடுவதை அறிவிக்கும்போதும் முக்காற்புள்ளி அமைக்க வேண்டும்.

**முற்றுப்புள்ளி : ( . )**

1. கல்வியே அழியாத செல்வம் ஆகும்.
2. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள். (திரு. வி. க. அவர்கள்.) உயர்திரு. முருகன்.
3. கி. பி. தி. வ. ஆ. (திருவள்ளுவர் ஆண்டு.)

வாக்கியத்தின் முடிவிலும், பெயர்களுக்கு முன் வரும் தலைப்பெழுத்துக்கள் மரியாதைச் சொற்கள் இவற்றின் இடையிலும், சொற் சுருக்க எழுத்துக்களின் இடையிலும் முற்றுப்புள்ளி அமைக்கவேண்டும்.

**வினாக்குறி : ( ? )**

*நீ எங்கே சென்றாய்? அவன் வந்தானா?* கேள்விக்குப்பின் வினாக்குறி அமைக்கவேண்டும்.

**உணர்ச்சிக்குறி : ( ! )**

| | |
|---|---|
| *இது பெரிய விந்தை!* | வியப்பு |
| *ஐயோ புலி! புலி!!* | அச்சம் |
| *நில்லாதே போ! போ!!* | வெகுளி |
| *சீ! சீ!! இது இழிவானது!* | இழிவு |
| *அந்தோ! இது கொடுமை!* | இரக்கம் |
| *வருக! வருக!! வருக!!!* | வரவேற்றல் |

வியப்பு, அச்சம், வெகுளி, இழிவு, இரக்கம், வரவேற்றல் முதலான உணர்ச்சிகளைக் குறிக்கும் சொற்களுக்குப் பின் உணர்ச்சிக்குறி அமைக்க வேண்டும்.

**மேற்கோள் குறி :** ("........") ('....')

"கற்க கசடறக் கற்பவை" என்று திருவள்ளுவர் கூறினர்.

ஆசிரியர், "நல்லொழுக்கத்தில் நில்லுங்கள்" என்று உரைத்தார்.

'கு' என்பது நான்காம் வேற்றுமையின் உருபு. 'அ' என்பது சுட்டிடைச் சொல்.

"மாணவர்களே! 'எனைத்தானும் நல்லவை கேட்க' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். ஆதலின், நல்லுரைகளைக் கேளுங்கள்" என்று ஆசிரியர் கூறினர்.

மேற்கோள்களைக் குறிப்பதற்கும், நேர்க்கூற்றைக் குறிப்பதற்கும் முன்னும் பின்னும் இரட்டை மேற்கோள் குறி அமைக்க வேண்டும். ஒரு எழுத்தையாவது சொல்லையாவது தனியாகக் குறிப்பிடும்போதும், நேர்க்கூற்றின் இடையில் முன்னும் பின்னும் ஒற்றை மேற்கோள் குறி அமைக்கவேண்டும்.

**பிறைக்கட்டுக்குறி :** ( )

உலகில் அறிவியல் (விஞ்ஞானம்) வளர்ந்து வருகிறது. உலகில் அறிவியல்—விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது.

ஒரு சொல்லின் பொருளை விளக்கவேண்டிய இடத்தில் பொருளை விளக்கவரும் சொல்லைப் பிறைக் கட்டுக் குறிக்குள் எழுதவேண்டும். அல்லது இடையில் சிறு கோடு இட்டு எழுதவேண்டும்.

பிறைக்கட்டு - இருபுறமும் பிறை போன்ற கோடுகளால் கட்டிக்காட்டுவது. பிறைக்கோடுகளுக்குள் கட்டுப்படுத்துவது. இது நகக் குறிக்கட்டு எனவும் பெயர் பெறும்.

வரலாற்றுக் குறி: (:—) பின் விளக்கக் குறி

அதன் பின் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

அவை வருமாறு:—

பல பொருள்களைப் பரிசு பெற்றான். அவை:—

அவன் செய்த அருஞ் செயல்கள் பல. அவை:—

முன் குறிப்பாகக் கூறப்பட்ட நிகழ்ச்சிகளையும், பொருள்களையும், உரைகளையும், செயல்களையும் பின்னர் விரிவாகக் கூறுவதற்கு முன் அமைக்கும் அவை வருமாறு, அவையாவன, அவை முதலான சொற்களுக்குப்பின் வரலாற்றுக்குறி அமைக்க வேண்டும்.

குறிப்பு: தொகை, வகைகளை முன்னர்க்கூறி அவற்றை விளக்கும்போதும், அடியிற் கண்டவைகள் என முன் எடுத்துக் காட்டி அவற்றை விளக்கும் போதும் முக்காற் புள்ளிதான் இடவேண்டும்.

## கீழ்க் கோடிடல்

1. கீழ்க் கோடிட்ட பகுதிகளுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

உலகம் புகழும். காளை வந்தான். வந்தானைப் பார்.

தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி

2. பல நூல் கற்றும், பலர்க்கெடுத்துரைத்தும் ஒழுக்கமில்லாதவன் உயர்வடையான். ஆதலால், ஒழுக்கமே உயர்வளிக்கும் என்பதை உணரவேண்டும்.

குறிப்பிட்டுக் காட்டவேண்டிய சொற்களுக்கும், வலியுறுத்திக் கூறவேண்டிய பகுதிகட்கும் கீழ்க்கோடு இடவேண்டும்.

## இடைப்பிற வைப்புக் குறி

செய்யுளுக்குப் பொருள் எழுதும்போதும், உரை நடையில் எழுதும்போதும் பொருளை நன்கு விளக்கும் பொருட்டு இடையில் பிறசொற்களைச் சேர்த்து எழுதுவதுண்டு. இவ்வாறு இடையில் பிறசொற்கள் வருதல் **இடைப்பிறவரல்** எனப்படும். இடையில் வந்த பிறசொற்களை அறிவிப்பதற்கு இடப்படும் குறி **இடைப் பிறவைப்புக்குறி** எனப்படும்.

1. "இனியவுளவாக இன்னாத கூறல்"

இனிய உள ஆக - (நன்மை தரும்) இனிய சொற்கள் (தன்னிடம்) இருக்கவும், (அவற்றைக் கூறாமல்) இன்னாத கூறல் - (தீமை தரும்) இனிமையல்லாத கடுஞ் சொற்களை (ஒருவன்) கூறுதல்.

2. வேலன் : (கண்ணனைப்பார்த்து) நண்ப! நீ தேர்வில் நன்ருய் எழுதி யிருப்பாய் என நம்புகிறேன்.

கண்ணன் : (வருத்தத்துடன் தலை குனிந்து) அன்ப! பல வினக்களுக்கு விடை எழுதாமல் விட்டுவிட்டேன்.

இஃது ஓர் உரையாடலின் ஒரு பகுதி. இங்கு உரை யாடுவோர் செயல்களும், குறிப்பும் தனியே பிறைக்கட்டுக்குள் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு செய்யுளில் வரும் இடைப் பிறவைப்பைப் பிறைக்கட்டுக் குறிக்குள் அமைத்தும், உரை நடையில் வரும் மெய்ப்பாடு, கருத்துக் குறிப்பு முதலான இடைப் பிறவைப்பைப் பிறைக் கட்டுக்குள் அமைத்தும் காட்டவேண்டும்.

## IX. வல்லெழுத்து மிகு மிடங்களும், மிகா விடங்களும்.

### வல்லினம் மிகும் இடங்கள்

1. அ+திசை=அத்திசை. எ+தடம்=எத்தடம்.
அந்த+கல்=அந்தக்கல். எந்த+கடல்=எந்தக்கடல்.
இப்படி+செய்=இப்படிச்செய்.
எப்படி+போனுன்=எப்படிப்போனுன்.
அங்கு+செல்=அங்குச்செல்.
எங்கு+போனுன்=எங்குப்போனுன்.
ஆண்டு+சென்ருன்=ஆண்டுச்சென்ருன்.

2. இனி + செய்வோம் = இனிச்செய்வோம்
செய்வதாக + கூறினன் = செய்வதாகக்கூறினன்.
வாவென + சொன்னன் = வாவெனச்சொன்னன்.

3. சால + பேசினன் = சாலப்பேசினன்.
தட + கை = தடக்கை.
தவ + பிஞ்சு = தவப்பிஞ்சு.

**சுட்டு, வினக்களின் முன்னும், அப்படி, அங்கு, ஆண்டு முதலான சொற்களின் முன்னும், இனி, ஆக, என என்னும் இடைச்சொற்களின் முன்னும், சால, தட, தவ என்னும் உரிச் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.**

1. படிக்க + சென்ருன் = படிக்கச்சென்ருன்.
தேடி + கண்டான் = தேடிக்கண்டான்.
போய் + பார்த்தான் = போய்ப்பார்த்தான்.

2. படித்து + பார்த்தான் = படித்துப்பார்த்தான்.
கேட்டு + தெளிந்தான் = கேட்டுத்தெளிந்தான்.

3. ஓடா(த) + குதிரை = ஓடாக்குதிரை.
உண்ணு(து) + சென்ருன் = உண்ணுச்சென்ருன்.

**அகர, இகர, யகர மெய்யீற்று வினை யெச்சங்களின் முன்னும், வன்ருெடர்க் குற்றுகர வீற்று வினை யெச்சங்களின் முன்னும், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் வினை யெச்சங் களின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.**

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு.
வண்டு + கால் = வண்டுக்கால்.
மருந்து + பை = மருந்துப்பை. (வலித்தல் விகாரம்)
பண்டு + காலம் = பண்டைக்காலம். (ஐ சாரியை)

ஆடு + கால் = ஆட்டுக்கால்
வயிறு + கடுப்பு = வயிற்றுக்கடுப்பு. } ட, ற ஒற்று இரட்டியது.
திரு + குளம் = திருக்குளம்.

வன்றொடர்க் குற்றுகரம், மென்றொடர் குற்றுகரம், வலித்தல் விகாரமும் ஐகாரச் சாரியையும் பெற்றுவந்த மென்றொடர்க் குற்றுகரம், ஒற்று இரட்டிவந்த நெடிற் றொடர் உயிர்த் தொடர்க் குற்றுகரங்கள் முற்றுகரம் இவற்றின் முன் வலி மிகும்.

பணத்தை + கொடு = பணத்தைக்கொடு. (ஐ)
எனக்கு + தந்தான் = எனக்குத்தந்தான். (கு)
மர(ம்) + பலகை = மரப்பலகை - மகர வீறு கெட்டது.

இரண்டாம் வேற்றுமை நான்காம் வேற்றுமை விரியிலும், மகரவீறு கெட்ட விடத்தும் வலி மிகும்.

## வல்லினம் மிகா இடங்கள்

அது + பார் = அது பார்.
இது + கொள் = இது கொள்.
அது + போழ்து = அது போழ்து.
எது + செய்தாய் = எது செய்தாய்?
யாது + சொன்னன் = யாது சொன்னன்?
அவ்வளவு + கொடு = அவ்வளவு கொடு.
எவ்வளவு + தந்தான் = எவ்வளவு தந்தான்?
அத்துணை + பெரிது = அத்துணை பெரிது.
எத்துணை + பேர் = எத்துணை பேர்?

அது, இது முதலான சுட்டுப் பெயர்களின் முன்னும், எது முதலான வினப்பெயர்களின் முன்னும், அவ்வளவு, அத்துணை முதலான பெயர்களின் முன்னும் வல்லினம் இயல்பாகும்.

ஓடின+குதிரை=ஓடின குதிரை.
பெரிய+பெட்டி=பெரிய பெட்டி.
ஓடாத+குதிரை=ஓடாத குதிரை.
படியாத+பையன்=படியாத பையன்.
மேய்ந்தன+குதிரைகள்=மேய்ந்தன குதிரைகள்.
பாடினர்+பெண்கள்=பாடினர் பெண்கள்.
வரும்படி+சொன்னான்=வரும்படி சொன்னான்.
தரும்படி+கேட்டான்=தரும்படி கேட்டான்.
உண்ணாது+சென்றான்=உண்ணாது சென்றான்.

**அகரவீற்றுப் பெயரெச்சங்கள், எதிர்மறைப் பெயரெச்சங்கள், வினைமுற்றுக்கள், 'படி' என வரும் வினையெச்சங்கள், எதிர்மறை வினையெச்சங்கள் இவற்றின் முன் வல்லினம் இயல்பாகும்.**

| | |
|---|---|
| கிளி+பறந்தது=கிளி பறந்தது.<br>குதிரை+கனைத்தது குதிரை=கனைத்தது. | முதல் வேற்றுமை. |
| நரி+கண்டான்=நரி கண்டான்.<br>வரிசை+பெற்றான்=வரிசைபெற்றான். | இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர். |
| அவனோடு+போனான்=அவனோடு போனான்.<br>விட்டிலிருந்து+போ=வீட்டிலிருந்து போ.<br>கண்ணனது+கை=கண்ணனது கை. | மூன்று, ஐந்து, ஆறும் வேற்றுமைத் தொகா நிலைத் தொடர்கள். |
| அண்ணா+பார்=அண்ணா! பார்.<br>கந்தா+போ=கந்தா! போ. | விளித் தொடர் |

**எழுவாய்த் தொடர், இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர், மூன்று, ஐந்து, ஆறும் வேற்றுமைத் தொகா நிலைத் தொடர்கள், விளித் தொடர் இவற்றின் முன் வல்லினம் இயல்பாகும்.**

| | |
|---|---|
| நானே + செய்தேன் = நானே செய்தேன்.<br>அவனோ + சென்றான் = அவனோ சென்றான்.<br>வாவென்று + சொல் = வாவென்று சொல். | ஏ, ஓ, என்று இடைச் சொற்கள். |
| நனி + தின்றான் = நனிதின்றான்.<br>உறு + புகழ் = உறுபுகழ்.<br>மழ + களிறு = மழகளிறு. | நனி, உறு, மழ உரிச்சொற்கள் |

ஏ, ஓ, என்னும் இடைச் சொற்களின் முன்னும் 'என்று' என வரும் இடைச் சொல்லின் முன்னும் நனி, உறு, மழ, என்னும் உரிச் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

| | |
|---|---|
| சுடு + சோறு = சுடுசோறு.<br>அடு + களிறு = அடுகளிறு. | வினைத் தொகை. |
| வா + கொற்றா = வா கொற்றா.<br>போ + தம்பி = போ தம்பி. | முன்னிலை ஏவல். |
| வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்.<br>வளர்க + தொழில்கள் = வளர்க தொழில்கள் | வியங்கோள் |

வினைத் தொகை, ஏவல், வியங்கோள் இவற்றின் முன் வல்லினம் இயல்பாகும்.

## வினாக்கள்

1. குற்றியலுகரம் என்பது யாது?
2. குற்றியலுகரம் எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.
3. முற்றியலுகரம் என்பது யாது?
4. குற்றியலிகரம் என்பது யாது? காட்டுடன் எழுது.
5. உயிரளபெடை என்பது யாது? காட்டுடன் எழுது.
6. இன்னிசை யளபெடையைக் காட்டுடன் எழுது.
7. ஒற்றளபெடையைக் காட்டுடன் எழுது.
8. ஒற்றளபெடையில் வரும் மெய்களெவை?
9. காரணப் பெயர், இடுகுறிப் பெயர்களை எழுதுக.
10. காரண விடுகுறிப் பெயரைக் காட்டுடன் எழுதுக.
11. பொதுப் பெயர், சிறப்புப் பெயர் இவற்றை விளக்குக.
12. அறுவகை ஆகு பெயர்களை விளக்கி எழுது.
13. அளவை ஆகு பெயர்களைக் காட்டுகளுடன் எழுதுக.
14. முதல் வேற்றுமை எவ்வெவற்றைக்கொண்டு முடியும்?
15. இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும்?
16. மூன்றும் வேற்றுமையின் உருபுகளெவை? எவ்வெவ் வுருபுகள் எவ்வெப் பொருள்களில் வரும்?
17. நான்காம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும்?
18. ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளெவை? எவ்வெப் பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.
19. ஆறும் வேற்றுமை உருபுகள் எவை? அவை எவ்வெப் பொருள்களில் வரும்?
20. தற்கிழமை பிறிதின் கிழமை இவற்றை விளக்குக.
21. ஏழாம் வேற்றுமை உருபுகள் எவை? எவ்வாறு வரும்?
22. பெயர்கள் விளிவேற்றுமையில் வரும்போது ஏற்படும் விகாரங்களெவை? காட்டுடன் எழுது.
23. வேற்றுமை உருபேற்கும்போது எவ்வெப் பெயர்கள் எவ் வெவ்வாறு வேறுபட்டு வரும்?
24. பகுபத உறுப்புக்களெவை? அவற்றின் தன்மைகளெவை?
25. தன்மை, முன்னிலை, படர்க்கை வினைமுற்று விகுதிகள் எவை? காட்டுடன் எழுது.
26. ஏவல் வினைமுற்று விகுதிகள் எவை? காட்டுடன் எழுது.
27. வியங்கோள் வினைமுற்று என்பது யாது? இதன் விகுதிகளெவை?
28. முன்னிலை வினைமுற்றுக்கும் ஏவல் வினை முற்றுக்குமுள்ள வேற்றுமை எவை?
29. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேற்றுமை எவை?

30. முற்றெச்சம் என்பதைக் காட்டுடன் எழுதுக.

31. ஏகார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.

32. ஒகார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.

33. உம்மை யிடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.

34. கொல் என்னும் இடைச்சொல் எத்துணைப் பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.

35. ஒரு குணம் குறித்துவரும் உரிச்சொற்களெவை?

36. இயல்பு வழக்கு எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.

37. தகுதி வழக்கு எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.

38. மரூஉ, மங்கலம், குழூஉக்குறி, இடக்கரடக்கல் இவற்றை விளக்குக.

39. மூவகை விகாரங்களைக் காட்டுடன் எழுது.

40. சில வன்றொடர், மென்றொடர்க் குற்றுகரங்களின் முன் வல்லினம் எவ்வாறு புணரும்?

41. பண்புத் தொகைப் புணர்ச்சியில் மைவிகுதிபெற்ற பண்புப் பெயர்கள் எவ்வெவ்வாறு புணரும்?

42. வெண்பாவின் பொதுவிலக்கணம் யாது?

43. ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் யாது?

44. சிலேடை அணி, மடக்கு அணி இவற்றை விளக்குக.

45. சொற்பொருத்தம் என்பது யாது?

46. சொற்றொடர், மரபுத்தொடர், உவமைகள், பழமொழிகளை வாக்கியங்களில் எப்படி அமைக்க வேண்டும்?

47. காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி இவற்றை எவ்வெவ்விடங்களில் அமைத்து எழுத வேண்டும்?

48. உணர்ச்சிக் குறியை எவ்வெவ்விடங்களில் அமைக்க வேண்டும்?

49. மேற்கோள் குறிகளை அமைக்கவேண்டியவிடங்களெவை?

50. பிறைக்குறி, வரலாற்றுக் குறிகளை அமைக்கவேண்டிய வடங்களெவை?

51. கீழ்க்கோடு இடவேண்டிய இடங்களெவை? காட்டுடன் எழுது.

52. இடைப்பிற வைப்புக்குறி எது? எவ்விடத்தில் இதை இட வேண்டும்?

53. வல்லெழுத்து மிகுமிடங்களெவை?

54. வல்லெழுத்து மிகாவிடங்களெவை?

TAMIL NADU NOOL PATHIPPAGAM
WORAIUR, TIRUCHIRAPALLI

Wrapper Printed at Vasan Press, Allimal Street, Tiruchi.